திருவள்ளுவர் நினைவு மலர்

[வெள்ளிவிழா ஆண்டின் வெளியீடு]

THIRUVALLUVAR SOUVENIR

திருக்குறள்மணிப் பதிப்பகம்

லாலுகுடி

1969

திருவள்ளுவர் நினைவு மலர்

[வெள்ளி விழா ஆண்டின் வெளியீடு]

1969

பதிப்பாசிரியர் :

திருக்குறள்மணி, எல். எஸ். ஆறுமுகம்

*

திருக்குறள்மணிப் பதிப்பகம்

லாலுகுடி

திருவள்ளுவராண்டு 2000-ம்]

[விலை : 0.75

நோபிள் பிரஸ், திருச்சி-2

பொருளடக்கம்.

அர்ப்பணம்

எங்கள் வங்கிகளின் தொண்டின் பயனுக இன்று தமிழக உழவுத் தொழிலில் பெரியதொரு மாறுதல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. டிராக்டர் வாங்கவும், கிணறு வெட்டவும், தரிசு நிலங்களைப் பண்படுத்தவும், இன்னும் பல உணவு உற்பத்தி வேலைகளுக்கும் இந்த வங்கிகள் கடன் தருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சமுதாயத்தில் வசதி குறைந்த மக்களுக்கு நில அடமான வங்கிகள் தனிப்பட்ட முறையில் உதவுகின்றன என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இந்த வங்கிகள் கூட்டுறவுத் துறையில் இயங்குகின்றன என்பது பெருமிதத்திற்குரிய ஒரு செய்தி. வேளாண்மைக் கடன் கொடுப்பதை ஏனைய வங்கிகள் பத்தோடு பதினென்ருகக் கருதும். ஆனல் எங்கள் வங்கிகளின் ஒரே பணி வேளாண்மைக் கடன் கொடுப்பதுதான்.

அஞ்சல் துறை அரசாங்கத்திற்கே தனியுரிமையாவது போல் நீண்டகால விவசாயக் கடன் முறை, கூட்டுறவு நில அடமான வங்கிகளுக்குதான் உரியது என்பதை ஒத்துககொள்வதற்குத் தடையேதுமிருக்காது.

சென்னை
கூட்டுறவு மத்திய நில அடமான வங்கியும்

தமிழகமெங்கும் உள்ள 106 பிரதம நில அடமான வங்கிகளும் இந்நாட்டில் உழவர்களுக்குத் தொண்டு செய்வதையே தம்முடைய பணியாகக் கொண்டுள்ளன என்பதை மீண்டும் கூறுகின்ருேம்.

முன்னுரை

நாடெங்கும் திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்பெறும் இந்நாளில் எமது வெளியீடாகிய **திருவள்ளுவர் நினைவு மலரின் 25-ம்** ஆண்டின் வெள்ளி விழா வெளியீட்டை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றேன்.

மகிழ்ச்சியும், சிறப்பும் வாய்ந்த இந்நாளில் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சியான இருபெரும் இழப்புகளைப்பற்றிய நிகழ்ச்சிகளை இங்குக் குறிப்பிடாதிருத்தல் நன்றி யுடைமையாகா. வள்ளுவர் ஈராயிரம் ஆண்டின் தொடக்கத்திலேயே தமிழக அரசின் முதல்வர் **அறிஞர் அண்ணுவையும்,** அதன் பிறகு சில மாதங்களில் இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் டாக்டர் **ஜாக்கீர் உசேன்** அவர்களையும் நாடு இழக்கும் அவல நிலை நேர்ந்தது. இருவருமே தமிழ் இலக்கியச் சுவை கண்ட அறிஞர். வள்ளுவரின் அறநூலை ஆய்ந்து அறிந்தோர். உலகத் தமிழ் மாநாட்டை நினைவிற் கொள்ளும் பொழுது இவ்விரு வரும் நம் அகக் கண்களில் தோன்றுகிறார்.

அண்ணு மறைந்த சில வாரங்கள் கழித்து நான் மதுரையில் **தமிழவேள், பி. டி. இராசன்** அவர்களைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருக்கும் வாய்ப்பு நேர்ந்தது. அப்பொழுது பெரியார் தமிழவேள், அண்ணு மறைவால் நாட்டுக்கு நேர்ந்த இழப்பை நன்கு உணர்ந்து கூறினர்கள். மேலும் அண்ணுவைப் பற்றி "அண்ணு சிறந்த இயல்பு உடையவர்; வள்ளுவர் கூறியுள்ள பண்புகள் நிறைந்தவர்; அவரின் பேச்சிலும், எழுத் திலும் நாகரிகம் தோய்ந்திருந்தது; தமிழும்-வள்ளுவமும் நாட்டில் பரவ வழிவகுத் திட்டவர்" என்று தமிழவேள் கூறினர்கள்.

நான் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் சமூக-அரசியல் துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தேன். அப்பொழுது அண்ணுவை அறிவேன். அவருடன் தொடர்பு கொண்டுமிருந்துள்ளேன். ஆதலின் அண்ணுவைப் பற்றி தமிழவேள் கூறியவை என் அனுபவத்தாலும் அறிந்த மெய்மைகளாகும். பொதுவாகக் கூறுமிடத்து அண்ணு **'நயத்தக்க நாகரிகர்'** எனின் பொருந்தும்.

டாக்டர் ஜாக்கீர் உசேன் அவர்களின் தாய்மொழி தமிழல்ல. அப்படியிருந்தும் அவர் தமிழ் இலக்கியத்தையும், வள்ளுவரின் அறநூலையும் தமிழரினும் நன்கு அறிந்து சுவைத்திருந்தார். இவை வள்ளுவரின் படத்திறப்பு, உலகத் தமிழ் மாநாடு ஆகிய நிகழ்ச்சிகள் சென்னையில் நிகழ்ந்தபொழுது அவர் ஆற்றிய உரைகளால் நன்கு அறிய நேர்ந்தது. பொதுவாகக் கூறுமிடத்து அவர் 20-ம் நூற்றுண்டின் வீரமா முனிவர் எனின் பொருந்தும்.

வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு தமிழர்களால் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் இந்நாளில், அண்ணாவின் ஆலோசனையின் பேரில் தமிழக அரசின் ஆதரவில் ஜனவரியில் விரிவுபடுத்தி அமைக்கப் பெற்றுள்ள **வள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழாக் குழு**வின் சார்பிலும் விழாவெடுக்க அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் தமிழக அரசின் முதல்வர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆவன செய்வார் என்பதற்கைய மில்லை. அனைத்திந்திய வானொலியின் திருச்சி நிலையத்தினர் வள்ளுவராண்டைச் சிறப்பாக கொண்டாடியதோடு, சில நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியும் வருகின்றனர். இந்நிலையத்தினரின் பணிகுறித்து முன்பும் எழுதிப் பாராட்டியுள்ளேன்.

இம்மலர் வெளிவரக் கட்டுரைகள், வாழ்த்துக்கள் உதவிய புலவர்-அறிஞர்கட்கும், விளம்பரங்கள் தந்துதவிய கூட்டுறவு, வணிக நிறுவனத்தினர்க்கும் நன்றி. அச்சியற்றித் தந்துதவிய நோபிள் அச்சகத்தினர்க்கும் நன்றி. இம்மலரை இன்னும் விரிந்த அளவில் வெளியிட ஆவலுற்றுப் புலவர் பலர்க்கு எழுதினேன்; அவருள் ஒப்பியோர் சிலரின் கட்டுரைகள் கிடைக்கப் பெறுததால் உருவில் குறுகினும், உதவியோர் கருத்துப் பொருள்களால் நிறைவுறச் செய்துள்ளனர். 'போதுமென்ற மனமே பொன்னுடைத்து' என்றவாறு இம்மலரைத் தமிழ்த்தாயின் திருவடிகளில் வைத்து வணங்குகின்றேன். குறைகளைந்து நிறைகொள்க !

லாலுகுடி,
தி. வ. ஆ. 2000-ம்.

அன்பிற்குரிய,
எல். எஸ். ஆறுமுகம்,
பதிப்பாசிரியர்.

ஆன்றோர் கூறிய அமுதமொழிகள்

திருக்குறளையும், திருவள்ளுவரையும் பற்றி அமரர்நிலை எய்திய நுண்மாண் நுழைபுலமிக்கச் சான்றோர் சிலர் கூறியுள்ள கருத்துரைகளிலிருந்து திரட்டித் தொகுத்தவற்றை வெள்ளிவிழா ஆண்டின் சிறப்பாக 'ஆன்றோர் கூறிய அமுதமொழிகள்' என்ற தலைப்பில் இப்பகுதியில் வெளியிடுகின்றோம். இப்பகுதி இந்நாட் தலைமுறையினருக்குக் கருவூலம் போன்றதாகும். —பதிப்பாசிரியர்.

மேம்பட்ட புலவர் வாழ்ந்த நாளிலே நம் புலவர் பெருமானாகிய திருவள்ளுவர் நந்தமிழ் நாட்டின் தவப்பயனாலும் உலகினறத்தாலும் தோன்றினார். அஞ்ஞான்று புலவருலகம் அவரைப் பாராட்டி மகிழ்ந்தது. அதை நாம் சொல்ல வேண்டியதில்லை. திருக்குறளுக்கு நிகரான நூல் வேறு இல்லை; வள்ளுவருக்கு நிகரான புலவருமில்லை என்று அக்காலத்துப் புலவர் பலரும் கூறி வாழ்த்தினர். நக்கீரர் முதலிய புலவர் பெருமக்களும் குறளைப் பாராட்டினரெனின் இந்நூலின் பெருமையை என்னென்றுரைப்பது! கூல வாணிகர் சித்தலைச் சாத்தனார் என்னும் பெரும் புலவர் தாமியற்றிய மணிமேகலை என்னும் நூலிலே. "தெய்வந் தொழாள் கொழுநற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்று பொய்யில் புலவன் புகன்றதும் பாராய்" என்று கூறியிருக்கின்றனர். அவர் வள்ளுவரைப் பொய்யில் புலவரெனப் போற்றினர். பிற்காலப் புலவரும் அவரைப் போற்றி வந்திருக்கின்றனர். கவியரசரெனப் புகழப்பட்ட கம்பரும் தாமியற்றிய பெருங் காவியமாகிய இராமாயண காவியத்திலே குறளை அநேக இடங்களில் அழகுறத் தீட்டியிருக்கிறார். நம்மிரு சமய குரவர்களும் தம் நூல்களிலே திருக்குறளையே மேற்கோளாகக் காட்டினார்கள். குறளை எல்லோரும் ஒரு படியாகப் போற்றினராதலின், அதன் பெருமையை நாம் ஆராயப்புகின் அது நம்மறிவினளவினதன்று. இக்குறளின் பெருமையை சிறிது காலவளவில் என்ன சொல்லிவிட முடியும். அப்பெரியார்களைப் பற்றித்தான் நாமென்ன சொல்லிவிட முடியும். திருவள்ளுவர், கம்பர், சேக்கிழார் முதலியோருடைய பெருமை நம்மால் மதிப்பிடக் கூடியதன்று. அவர்களின் பெருமை நம் அறிவினளவினதன்று. அவர்களைப் பற்றி உலகப் புலவர்கள் என்னென்ன சொல்லி இருக்கிறார்களென்பது கவனித்து உணரத்தக்கது. சங்கப் புலவர் பலரும் வள்ளுவரைப் போற்றினரெனின், நாம் அவர் பெருமை எத்தன்மைத்தென்று எவ்வாறு உரைக்கவியலும்? அக்குறளின்கண் எப்பொருளுமுள; இல்லாதனயில்லை. எந்த ஒரு நூலைக் கற்றால் எல்லா நூற்களையும் கற்ற பலன் தரும்? அவ்வொரு நூலே **திருக்குறள்**! நாமும் அம்முறை தெரிந்து அந்நூலைக் கற்றால் மிகுந்த பலனெய்தலாம். குறளைப் பயில்வது எவ்விதம்? அதை வள்ளுவரே கல்வி யென்னும் அதிகார வாயிலாக விளக்கி இருக்கிறார். அதைக் கொண்டு பயிலும் முறையைத் தெளிவீர்களாக!

—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்

* * *

"தனக்கிணையற்றது. எனவே தன்னின் உயர்ந்த தொன்றுமின்றித் தனிச் சிறந்த ஒன்று எனப் பொருள்தரும் **'தமி'** என்னும் அடியால் பிறந்தது தமிழ். இம்மொழி தன் இலக்கணத்திற்கு இலக்கியமாகவும் ஏனைய மொழிகளை வென்றெடுத்துயர்த்திய வெற்றிப் பதாகை ஒப்பாகவும் தோன்றியது தமிழ் மறை என்னும் திருவள்ளுவர் குறள். இந்நூலாசிரியராகிய வள்ளுவர்க்கு முதற்பாவலர், செந்தாப்போதார் முதலாகிய புகழ்ப் பெயர்கள் பல. இந்நூலில் கூறப்படாத பொருள் வேறொரு நூலிலும் இல்லை என்றும் உலக மக்களுக்கு அறிவுறுத்தற் பாலனவாகிய எல்லா நீதிகளும் உலகியல் வாழ்க்கையின் உயரிய கருத்துக்கள் யாவும் இவ்

வொரு நூலிலேயே அடங்கிக் கிடக்கின்றன. "எல்லாப்பொருளும் இதன்பாலுள இதன்பால் — இல்லாத எப்பொருளுமில்லை, என்பது திருவள்ளுவமாலை. கால மாறுதலால் மக்கள் அறிவு பெருகிப் பற்பல புதினங்களை அறிந்து பழையவற்றை வெறுத்திகழ்ந்து பண்டுகாணுப் புதுக்கருத்துக்களை மேற்கொண்டாலும் இந்நூல் கூறும் பொருட்கள் சிறிதும் அசைக்கப்பெருது நிலையுறும். 'என்றும் புலராது யாணர் நாட் செல்லுகினும் — நின்றலர்ந்து தேன்பிலிற்றும், என அறிஞர்கள் நன்குணர்ந்துரைக்கின்றனர்".

—புலவரேறு அ. வரதநஞ்சய பிள்ளை

* * *

"வள்ளுவர் கடவுள் நம்பிக்கையுடையவர். அவர் அறநூலை எரித்துவிட விரும்பாத புதிய புலவர் சிலர், 'கடவுள் வாழ்த்து' பிற்கால மூடநம்பிக்கையார் புனைந்து புகுத்திய இடைச்செருகலிது என்பர். இக்கடவுள் வாழ்த்து குறளில் தலையணியாய்த் திகழ்கிறது. அன்றியும், பிற்காலப் புலவர் தொகைநூல்களுக்கு பாடிச் சேர்த்த கடவுள் வாழ்த்துக்கள் அனைத்துக்கும், வள்ளுவர் கடவுள் வாழ்த்து மாருகவும் இருக்கிறது. அவைகள் மக்கள், மனைவியர், நட்பு-பகை முதலிய உறவும் உடையராய், ஐம்புலனும் அறுபகையும் கடவாத பிற நூற் கடவுளரைப்போல் அல்லாமல்; பண்டைத் தமிழறிஞர் கண்ட கடவுளை வாழ்த்துவர் வள்ளுவர். முதற்குறளில் கடவுளியல்பும், உலகோடுடைய தொடர்பும் விளக்கி, பிற குறள்களால் அக்கடவுள் வழிபாடு கூறுவர். முதற் குறள் தத்துவமுரைப்பது; மற்றவை சமயநெறி காட்டுவன. முதற்குறளில் வள்ளுவர் அறிவுக் கண்ணுல் கண்ட கடவுளியலை விளக்குவதால் அதை ஆராயின் அவர் கண்ட கடவுளையும் ஒருவாறு நாம் காணலாம்."

—நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார்
எம்.ஏ.,பி.எல்.,

* * *

"செல்வம், கல்வி, அறிவு, அழகு, ஆண்மை, வீரம், அதிகாரம் முதலிய உயர் நலங்களை யெல்லாம் ஒருங்கே பெற்று மன்னர் மன்னவனுய் நின்று உலகம் முழுவதும் ஆண்டு வந்தாலும் முடிவில் மாண்டு மண்ணுய் மடிந்து போகின்ருன். அதிகாரத்தோடு வாழுங் காலத்திலும் அவலக் கவலைகளால் அல்லலே காண்கின்ருன். எவ்வழியும் எல்லையில்லாத துயரங்களே யாண்டும் பெருகி இருத்தலால், பிறவி துன்பம்; பிறவாமையே இன்பம் என வந்தது. 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை, (குறள்-362) என மனிதன் உறுதியாக வேண்ட உரியதை வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் உணர்த்தி யருளினர். அடிகள் மொழிகள் அமுதத் துளிகள்; பருகிய உயிர்கள் பெருமகிழ் வடைகின்றன. பேரின்பம் பெறுகின்றன. மனித அறிவு புனிதம் அடைந்து இனியது காண வேண்டும்."

—புலவர், கவிராஜ பண்டித ஜெகவீர பாண்டியனுர்

* * *

"அனுதியைப் பற்றிப் பெரியோர் யாரும் கூறமுடியாது. காணுததைக் கண்டது போலக் கூறப் பெரியோர்கள் முற்படமாட்டார்கள். எனவே குறளாசிரியரும் சொல்ல முடியாத ஒன்றைச் சொல்லாமல் விட்டு, 'ஆதிபகவன்' என்று கூறி இருக்கிருர். இதுபற்றியும் பல போராட்டங்களும் இன்னும் நடைபெற்று வருகின்றன. இது வேண்டற்பாலதா எனின், ஆம்; இத்தகைய போராட்டங்கள் வேண்டுமென்றே கூறுவேன். அறிவுப் போராட்டங்கள் வேண்டாம் என்று யாரும் கூற முடியாது. கைப் போர்தான் கூடாது. கருத்து வேற்றுமைகள் வரவேற்கப்பட வேண்டியதாகும். அப்போதுதான் நாடு முன்னேறும். ஆனல் கை கலப்பு மட்டும் வேண்டாம். இச்சமயம் உங்கள் நினைவுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். நான் பழைய ஏடுகளை நன்கு ஆராய்ச்சி செய்தபோது வள்ளுவர், இரண்டாவது குறளாக, "இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பதையே குறிப்பிட்டிருக்கிருர். இது குறள் 1-வது அதிகாரத்தில் 2-வது செய்யுளாகக் காணப்படுகிறது. இருளைப் பற்றி விவாதம் பல காலமாக நடைபெற்று வருகிறது. இருள் பொருளா? அல்லவா என்று ஆராய்ச்சி மிகுந்துள்ளது. வெளிச்சம் பொருளா என்ருல் அது

பொருள் என்று முடிவு கூறப்பட்டுள்ளது. இது தத்துவ சாஸ்திரிகள் சண்டை. ஏன் பெரிய பாஷ்யக் கர்த்தர்களுக்குள்ளும் சண்டை. இதைப்பற்றி வள்ளுவர் என்ன கூறுகின்றார்? விஞ்ஞானிகள் கண்டதையே கூறுவர்; காணுததைக் கூற மாட்டார்கள். அத்தன்மையிலேயே இதற்கும் பொருளைத் தேட வேண்டும். விஞ்ஞானி நுட்பத்தை எண்ணி நேராகச் சொல்பவர். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். விஞ்ஞானிகள் இருளைப்பற்றி என்ன கூறுகின்றனர். பொருள் என்றால் அதற்குச் செயல் இருக்க வேண்டுமென்பதேயாகும். இருளில் செயல் இருக்கிறதா? ஜெர்மனியிலே 316 அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து, செய்து இருளுக்கும் அறிவு இருக்கிறது என்று முடிவுக்கு வந்துள்ளனர். இப்போது ஆகாயத்திற்கும் செயல் இருக்கிறது என்று காட்டப்பட்டுள்ளது. அதேபோல இருளுக்கும் செயல், நிகழ்ச்சி இருக்கிறது. இப்படிப்பட்ட ஆராய்ச்சியின் மூலமே குறளைப் பார்க்க வேண்டும். இருளுக்கும் பொருள் உண்டு என்று கூறியுள்ளார் வள்ளுவரும். அப்பொருள் எது? இயற்கைதான் அப்பொருள்.''

—திரு. வி. கலியாணசுந்தரனுர்

* * *

''எல்லாச் சமயத்தாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய வாழ்க்கை நூல் ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை உலகுக்கு அளித்தது தமிழ். 2000-ம் வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டில் பிறந்த திருவள்ளுவர் அந்தக் குன்றாச் சிறப்பை அடைந்தனர். அவர் தந்த திருக்குறள் தலைசிறந்தவாழ்க்கைத் துணைநூல். 2000-ம் வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட ஒரு நூல் தற்காலத்தில் வாழும் மக்களுக்கு வாழ்க்கைத் துணையாய் இருக்கமுடியுமா? உலகம் மாறுதல் அடைந்துகொண்டே போகிறது. நடை, உடை, பாவனை, மனக் கருத்து, நம்பிக்கை, அரசியல் முறைகள், நாகரிகம் இவையெல்லாம் சென்ற 20-பது நூற்றாண்டுகளில் எவ்வளவு மாறுதல் அடைந்திருக்கின்றன. அப்படியிருக்க, திருக்குறள் நாம் வாழும் இன்றைய உலகின் அமைப்புக்கு முழுதும் பொருந்தியதா என்று கேட்பதில் தவறில்லை. இந்த சந்தேகத்தை ஓரளவுக்கு சுருக்கமாய் ஆராய்வோம். நடை, உடை, பாவனை, நாகரீகம் இவையெல்லாம் நாம் உடலில் அணியும் ஆடை. ஆபரணங்களைப் போன்றவை. அவைகள் நாளுக்குநாள் மாறுதல் அடையத்தான் செய்யும். நாடுகள் தோறும் அவை மாறுபட்டும் இருக்கும். ஆனால் உயிரின் அடிப்படையான உண்மை என்றும் மாறாதது. மனித வாழ்க்கையில் எக்காலத்திலும், எந்நாட்டிலும், மாறாத அடிப்படையான உண்மைகளைத் தான் திருவள்ளுவர் குறளில் கையாண்டிருக்கிறார். அதனால்தான் குறளை உலக மக்களுக்கெல்லாம் எக்காலத்திலும் பயன்படும் வாழ்க்கைத் துணை நூல் என்று போற்றுகிறோம். அணுவில் உலகத்தை அழிக்கவல்ல அபார சக்தி இருக்கிறதென்று விஞ்ஞான சாஸ்திரம் நிரூபித்து விட்டது. இரண்டு வரிகள் கொண்ட சிறுகுறள் வெண்பாவில் உலகத்தைக் காக்கவல்ல அபார உண்மை இருக்கிறது என்பதை எத்தனை பேர் அறிந்திருக்கின்றனர்?''

—சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

* * *

''திருவள்ளுவர் பெருமையை இன்று உலகம் உணர்ந்திருக்கின்றது. இந்நாட்டாரேயன்றி மேல்நாட்டாரும் வள்ளுவரைப் போற்றுகிறார்கள். பெஸ்கி என்ற இயற்பெயர்கொண்ட இத்தாலியர், வீரமாமுனிவர் என்னும் தமிழ்ப்பெயர் பூண்டு 200 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் தொண்டு செய்தார். முதன்முதல் வள்ளுவரை மேல்நாட்டினர்க்குக் காட்டியருளியவர் இவரே. திருக்குறளில் அறம், பொருள் ஆகிய இரு பாலையும் இவர் இலத்தீன் மொழியில் பெயர்த்தமைத்தார். அதனைப் பின்பற்றி இப்பொழுது மேல் நாடுகளில் வழங்கும் பல மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுத்திகழ்கின்றது. ஆங்கில நாட்டை நெடுங்காலம் ஆண்ட விக்டோரியா மகாராணியார் நூல் நிலையத்தில் பைபிளுக்கு அடுத்தபடியாகத் திருக்குறள் அமர்ந்திருந்ததென்று தெரிகிறது.

தமிழ்நாடு ஒரு சிறந்த பண்ட மாற்றுச் செய்துகொண்டதென்று பாரதியார் கருதுகிறார். 'வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற பாட்டில் அக்கருத்தைக் காணலாம். தமிழகம் ஒன்றைக் கொடுத்தது; ஒன்றைக் கொண்டது. இதுதான் பண்டமாற்று. ஒப்பற்ற திருவள்ளுவரை உலகிற்குக் கொடுத்தது; அதற்கீடாக உலகில் வான்புகழைக்கொண்டது. தமிழ்ப் புலவர் எல்லோரும் வள்ளுவரைக் கண்டார்கள். ஆயினும் ஒவ்வொருவரும் அவரைக்கண்ட முறையில் வேற்றுமை யுண்டு. பழம் புலவர்களாகிய இளங்கோ வடிகளும், சாத்தனாரும், கவியரசராகிய கம்பரும் வள்ளுவர் குறளை அள்ளி இருக்கிறார்கள்.

—திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.,

* * *

''உலகின்கண் பல இடங்களில் பல வேதங்கள் உள. உதாரணமாக திபேத், சீனா முதலிய இடங்களில்உள்ள பவுத்தர் களுக்கு 'வினயபிடகம்' 'அபிதன்ம பிடகம்' 'சுத்த பிடகம்' என்ற மூன்று வேதங்கள் உண்டு. ஐரோப்பிய நாட்டில் உள்ள கிறித்தவர்களுக்கும் பிற இடங்களில் உள்ள கிறித்தவர்களுக்கும் 'பைபிள்' என்ற விவிலிய நூல் வேதமாக இருக்கிறது. அராபிய நாட்டிலும் மற்ற யிடங்களிலும் உள்ள முஸ்லீம்களுக்கு 'குர்ஆன்' வேதமாக விளங்குகிறது. இந்துஸ்தானத்திலும் ஏனைய இடங்களிலும் உள்ள ஆரியர்களுக்கு 'இருக்கு, யசுர், சாமம்' என்ற மூன்றும் வேதங்களாய் இருக்கின்றன. 'அதர்வணம்' ஒரு வேதமாகக் கூறப்பட்டாலும் அது தனிப் பட்டதல்ல. அதனாலேதான் 'வேதம் த்ரைஇ' என்றும், 'மும்மறையில் நடு மறைவில், என்ற வாக்குகளும் எழுந்தன. பாரசிக நாட்டினின்றும் இந்தியா வில் குடியேறியுள்ள பார்சிகளுக்கு, 'செண்ட் அவஸ்த்' என்னும் வேதம் உண்டு. தமிழ்நாட்டிலோ அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற் பொருளுக்கும் நான்கு மறைகள் இருந்து மறைந்து போனபின், அவைகளின் வழித்தாக **'திருக்குறள்'** என்னும் வேதம் பாடப்பட்டு தமிழ் மறையாக வழங்கி வருகின்றது. மேலே கூறப்பட்ட வேதங்கள் எல்லாம் அவரவர்க்கே சிறப்பான வேதங்கள். ஆனால் திருக்குறளோ அப்படியல்ல. தமிழர்களுக்குச் சிறப்பான வேதமாக இருந்தாலும், எல்லா நாட்டார்க்கும் எல்லா மக்களுக்கும் பொதுவான மறையாகச் செய்யப்பட்டு இருப்பதால் **'பொதுமறை'** என்று வழங்கப் பெற்றது.''

—துடிசைக்கிழார் அ. சிதம்பரனார்

* * *

''திருக்குறள் தமிழ் மொழியிற் செய்யப்பட்டது; தமிழரால் செய்யப்பட்டது. ஆயினும் அது தமிழ்நாட்டுடன் நிற்க வில்லை. தமிழ் மணம் வீசாத நாடுகளி லும் திருக்குறள் மணம் வீசுகின்றது. என்னை? தமிழ் வழங்காத வேற்று நாடுகளில் உள்ள அறிஞர்கள் திருக்குறளின் மொழிபெயர்ப்புக்களைப் படித்துப் பேரின்பம் பெறுகின்றனர் ஆகலின் என்க. நாம் தமிழை அறிந்து அதன் வாயிலாகத் திருக்குறளை அறிகிறோம்; ஆயின், அயல்நாட்டார் திருக்குறளை முதலிற் படித்து அதன் வழியாகத் தமிழைப்பற்றி அறிகின்றனர். இதனால் தமிழ் மொழிக்குள்ள ஆட்சியினும் திருக்குறளின் விரிந்த ஆட்சிப் பரப்பை நன்கறியலாம். திருக்குறள் வடமொழி, வங்கமொழி, தெலுங்குமொழி, இந்தி முதலிய உள்நாட்டு மொழிகளிலும், ஆங்கிலம், ஜெர்மன், பாரசீகம், பிரஞ்சு முதலிய வெளிநாட்டு மொழிகளிலும் பெயர்த் தெழுதப்பட்டுள்ளது எனின், இது தனிப்பட்ட சிறப்புடைய தமிழ்நூல் என்பது கூறாதே அமையுமன்றோ?

—பேராசிரியர் மா. இராசமாணிக்கனார், B.O.L., L.T., M.O.L.

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். —இடைக்காடர்.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். —ஒளவையார்.

மேனாட்டறிஞர் கருத்துரைகள்

'இலியட்', 'ஈனிட்' டிவைன் காமடி 'பாரடைய்ஸ்லாஸ்ட்' நிபங்கன்லீட் முதலான பல நாட்டு காவியங்களைப் படித்தவர்கள். உயரிய நீதிகளைச் சொல்லும் ஒரு தொகை நூலை மூன்று கோடி மக்கள் தங்கள் வேதநெறியாகக்கொண்டு பெருமையடைவதை நம்பாதிருக்கவும் கூடும். ஆனால் கிரேக்கர்களிடம் ஹோமர் விளங்கியதுபோல தமிழர்களிடம் திருவள்ளுவர் விளங்கினர் என்பது முற்றும் மெய்யான ஒன்று. திருக்குறள் ஓர் கல்விக் கருவூலம், கவிவாணர்களுக்கு வழிகாட்டி, புலவர்களுக்கு உற்றதுணையாக அமைந்த ஈடு இணையற்று விளங்கும் செய்யுட்கள் நிறைந்த ஒழுக்க நூல். தமிழர்களின் மனப்பான்மை உயரிய ஒழுக்கத்தையே தழுவி நின்றது என்பது நன்கு விளங்கும். தமிழ்ப்பெருங்குடி மக்களிடம் இத்தகைய ஒழுக்கக் கோட்பாடுகள் நிறைந்திருந்ததனல்தான் புத்த மதம் இந்நாட்டில் குடிகொள்ளவும், நன்கு பரவவும் முடிந்தது என்று கருதுவதில் தவறில்லை. திருவள்ளுவர், கபிலர், சிவவாக்கியர், ஔவை முதலான பல பழந்தமிழ்ப் புலவர்களின் நூல்வளத்தை விளக்கவந்த பண்டிதர்கள் அவர்களெல்லாம் சமணர்களென்று பறைசாற்றுவாராயினர். இப்படிக் கூறுவதற்குச் சான்று ஏதுமில்லை. எனினும் புத்த சமண மதங்கள் பழங்காலத்துத் தமிழ்ப் புலவர்கள் உள்ளப்பான்மையே கொண்டிருந்தன என்பதை எளிதில் ஐயுற முடியாது.

நெருப்பு, போர், கொடுங்கோன்மை ஆகியவற்றாலும், சூழ்ச்சித் திறமையினாலும் இந்தியாவில் புத்தமதம் பரவவிடாதபடி தடுக்கப்பட்டது. என்றாலும் புத்த மதத்தின் அடிப்படைக்கொள்கைகளை எவராலும் அழிக்க முடியவில்லை. மத வேறுபாடுகளை நன்கு அறிந்து ஒதுக்கியமையால் திருவள்ளுவர் தம் நூலை, எல்லாவற்றையும் அழித்துவந்த சமயக் காரிருள் சூழலிலிருந்து காப்பாற்ற முடிந்தது. இந்நூலை **(குறளை)** அழிப்பதற்குத் தக்க காரணமோ, கிட்டாதொழிந்தது. மனைவிமார் கணவன்மார்களை அன்புடன் நேசிக்க வேண்டுமென்றும் மக்கள் வாய்மை, ஈகை, அமைதி குடிகொண்டிருக்கவேண்டுமென்றும், அரசர்கள் நிறைந்த அறிவுடையவர்களாகவும், நாணயமும், கட்டுப்பாடும், பிறர்க்குதவும் தன்மையுடையவர்களாகவும் இருக்க வேண்டுமென்னும் படிப்பினைகளைக் கூறும் ஒரு புலவனை, எந்த குருவும் குற்றம் கூறமுடியாது. யூதர்களுக்கு பத்துக் கற்பனைகள் எவ்விதம் வழுவாத கோட்பாடாக இருந்தனவோ, அதேபோல குறளின் கூற்றுக்கள் கற்பனைகளாகக் கருதப்பட்டு வருகின்றன. குறள் செந்தமிழின் மணிபோல தூய உயர்ந்த நடையழகு வாய்ந்து விளங்குவதாகும். இத்தாலியின் மொழிக்கும் கருத்து மேம்பாட்டிற்கும் டாண்டேயின் பெருநூல் எவ்வளவு அவசியமும், பெருமையும் வாய்ந்ததோ, அவ்வளவிற்கும் தமிழ் மொழிக்கு குறள் அவசியமும், பெருமையளிப்பதுமாகும் என்று கூறுவது மிகையன்று.

—**சார்லஸ் ஈ. கவர்**

* * *

வள்ளுவர் குருமார்களைக் கண்டித்து ஒன்றுமே கூறவில்லை என்று கூறி இருப்பதில் உண்மை இருக்கலாம். அவர் குருமார்களுக்கு எதிரிடையாக எதுவும் கூறவில்லை. என்றாலும் அத்தகைய ஒரு நூலில் ஒன்றுமே கூறுதிருந்துவிட்டது குறிப்பிடத்தக்கதேயாம். வள்ளுவர் 'அந்தணர்களை பற்றிக்கூறி இருப்பதில் பிறப்பினால் மாத்திரம் அந்தணராகிவிட முடியாது என்பதை அறிந்துகொள்ளலாம். அழகும், தண்மையும், ஐம்புலனடக்கமும்கொண்டு விளங்கும் பண்புடையோர்களையே, ''அந்தணரென்போர் அறவோர். மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்'' என்று மொழிகிறார். மறைவு ஒழுக்கம், போலிச் சமயப்பற்று, கரவு, மதக்கொடுமை ஆகிய பலவற்றையும் நூல் முழுதும் கண்டித்திருக்கிறார். இந்துக்களுடைய கடவுளை சுட்டிக் காட்டி இருக்கிறார் என்றும் கூறலாம்.

—**ரெவெரெண்டு ஈ. ஜெ. ராபின்ஸன்**

பறையரென்று பாவிக்கப்பட்டிருந் தாலும் திருவள்ளுவர் தெய்வத்தன்மை வாய்ந்த ஒரு புலவர் பிரானுகவே மதிக் கப்பட்டுள்ளார்.

தமிழ் நூல்களில் மிகவும் சிறந்த நூல்களாக யாவராலும் கருதப்பட்டு வரும் குறளும், சிந்தாமணியும் வட மொழித் தொடர்பு கொஞ்சமுமில்லாது அமைப்பு, யாப்பு முதலிய தனிச்சிறப்பு வாய்ந்து விளங்குகின்றன.

—ரைட். ரேவரெண்டு. ராபர்ட் கால்டுவெல், டி.டி.எல்., எல்.டி.

* * *

திருக்குறளில் கூறப்பட்டுள்ளவை களில் சில மிகவும் பழையனவானவற் ருேடு ஒத்த காலத்ததாகும்.

...இந்நூல் மிகுந்த சிறப்புவாய்ந்த நீதிகளைப்பற்றிக் கூறவந்த செய்யுள் நூலாகும். —வள்ளுவர் தம் நூலை தொடங்குமுன் கடவுள்வாழ்த்துக்கூறித் தொடங்கி இருக்கிருர். "பிறவேதி" யாகிய அவர், கடவுள் வாழ்த்து கூறி இருக்கும் முறையையும் திறமையையும் நம்மால் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. நூல் முழுவதிலும் இந்துக் களின் மூடநம்பிக்கைகள் பலவற்றிலிருந் தும் விடுபட்டு அவர் நன்கு விளக்கம் தருகின்ருர்.

—ரேவரெண்டு. எலிஜாஹூஸ்

* * *

நடையிலும், விஷயத்திலும் இணை யற்றுத் திகழும் நூல்கள் பலவற்றிலும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள திருக்குறள் (இந்தியா) ஏற்ற நூல்களில் ஒரு பகுதியாயிருப்பதாலும், நம் உள்ளத் தைக் கவரும் தன்மையுடையதாயிருக் கிறது. மிகுதியும் தனிச்சிறப்புடன் விளங்குவதும் இந்நூலே. வகுப்பு, பிரிவு ரீதியாக ஏற்பட்டுள்ள நிலைமைகளை வெறுத்தொதுக்கி, எல்லா மக்களுக்கும் ஒத்தவாறு அமையக்கூடிய விஷயங்களை மட்டுமே தம் நூலில் திருவள்ளுவர் சொல்லியிருக்கிருர். இதனுல் வேற் றுமை மறைய இடமளித்து உயர்ந்து நிற்க ஏதுவளிக்கின்றது.

—ரேவரெண்டு. டபிள்யூ. எச். ட்ரூ

தமிழ் நூல்களில் மிகவும் சிறந்து விளங்குவது திருக்குறளாகும், உயர்ந்த முறையிலும், தெளிவாகவும் உள்ளக் கருத்துக்களை எடுத்து இயம்புவதில் இந் நூல் முக்கியமானதில் ஒன்று. ஆசிரியர் திருவள்ளுவர், சாதிப் பிரிவுகளையும், வேற்றுமைகளையும், மூடநம்பிக்கைகளை யும் தக்க முறையில் எடுத்துக்காட்டி சொல்கிருர். தூய்மையான நல்லொழுக் கத்தையும், மெய்யான நீதிகளையுமே வகுத்துச் சொல்கிருர். வாய்மை, அறம் இவைகள் வாழ்விற்கான அறங்களில் உயர்ந்தன என முழக்குகின்றனர். இல் வாழ்விற்கும், குடியாட்சி வாழ்க்கை முறைக்கும் ஏற்ற உயர்ந்த ஒழுக்கக் கோட்பாடுகளை ஒன்றுபடுத்தி விதித்துச் செல்கிருர். உயரியவற்றை நினைப்பதி லும், அவற்றைச் சீரியமுறையில் எழுது வதிலும் வியக்கத்தக்க வகையில் எழுதி யவற்றைச் செய்யுள் நடையில் அமைப் பதிலும், தெய்வத்தன்மை பொருந்திய இயற்கை அன்னையின் சொல்லற்கரிய எழில் நலங்களைச் செவ்விய மனத்துடன் ஆய்ந்து, ஆய்ந்து ஏற்பதிலும், அகத் தெழும் இன்ப நிகழ்ச்சிகள் மிக எளி தான முறையில் ஆராய்ந்து கூறிச் செல் வதிலும் எத்தகைய பிழையுமின்றி நிறைந்த ஆற்றல் படைத்தவராய் விளங் குகின்ருர்.

—எம். ஏரியல்

* * *

திருக்குறள் கொடுக்கும் இன்பம் எத்தகையது என்று எந்த மொழி பெயர்ப்பும் எடுத்துக்காட்ட இயலாது. உண்மையைச் சொல்லுமிடத்தில் வெள் ளிச்சரிகைப் பையிலிட்ட பொன் இலந் தைக்கனி எனக் கூறும் தன்மையது.

—டாக்டர். கிரேளல்

* * *

உலகம் தந்த அறிஞர் பெருமக் களில் மயிலையைச் சேர்ந்த நெசவுக்கார ரும் ஒருவர். முற்றும் முடிந்ததாய் அவர் இயற்றிய ஒரே தனித்தமிழ் நூலாகிய (திருக்குறள்) அது, கால மாறுபாட்டுச் சூழலிடைச் சிக்கியும், கரையே துங் காணுதது. கருத்தைக் கவரவல்லதான எத்தகைய பாடபேதமும் இல்லாமலும் தலைமுறைக் கணக்கில் வந்திருக்கின்றது.

நூலின் சிறப்பில் அந் (குறள்) நூல், மற்ற எல்லாத் தமிழ் நூல்களையும் விட உயர்ந்து நிற்கின்றது. ஒரு நாட்டு மக்களின் மனத்துள்ளே, உயிரிலே, இடங்கொண்டுள்ளனவும், என்றென்றும் மறையாது விளங்குவனவுமாகிய மிகச் சில பெரிய நூல்களில் அதுவும் ஒன்று.

குறளுக்கு வந்த சிறப்பிற்குத் தக்க காரணமாயமைந்தது அதன் ஓதற்கரிய செய்யுள் நடையின் திறமேயாகும். குறுகிய செய்யுளால் அமைந்துள்ளதால் உண்டாகிய சொல் சுருக்கம் செந்நாப் போதா (திருவள்ளுவர்) ரின் உரைகளுக்குத் தெய்வத்தன்மையைக் கொடுக்கின்றது. அவை பொருக்கி எடுத்த நீதியுரைகள். கிரீசில் பாடப்பட்ட பாட்டுகளுக்கும், இதற்கும் பொருளிலும், கருத்திலும் பாடப்பட்ட காலத்திற் கொத்த குடி இயலிலும் ஒற்றுமை காணப்படுவது வியப்பைக் கொடுப்பதாகும். கிரேக்க குறுஞ்செய்யுள் நடையிலும், மார்ஷலின் உரைகளிலும் இலத்தீன் மொழியிலுள்ள இயற்கைச் செய்யுட்களிலும் குறளில் விளங்கும் பண்பு நலங்களில் சிலச் சில காணப்படுகின்றன.

தமிழ்யாப்பில் அமைந்துள்ள தொடை நயங்களின் அழகுகள் புரோப்பர் ஷியஸ் என்பாரின் செய்யுள் சிறப்புக்களை ஞாபகப்படுத்துகின்றன.

—ரெவரெண்டு. ஜீ. யூ. போப், எம்.ஏ., டி.டி.

—ooOOOoo—

திருக்குறளின் பெருமை

[நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை]

(1) அமிழ்தமென்று மிகமகிழ்ந்து அறிஞர் யாரும் போற்றிட
அறிவறிந்த மொழிஇதென்று அகிலமெங்கும் ஏற்றிடும்
தமிழ் மொழிக்கு அழிவிலாத தன்மைசூட்டி வைத்ததும்
தரணியெங்கும் இணையிலாத இல்லறத்தை நத்திடும்
அமைதிமிக்க ஜனசமூகம் தமிழரென்ற கீர்த்தியும்
அடிமையற்ற குடிமைபெற்ற அரசுகண்ட நேர்த்தியும்
இமையவர்க்கும் நெறிபுகட்டும் எங்கள்தெய்வ வள்ளுவன்
இங்குரைத்த குறள்களென்ப ஈந்த நன்மை அல்லவோ

(2) காடுசென்று குகையடைந்து கண்கள்மூடி எண்ணியும்
காவிகட்டி ஓடெடுத்து கஷ்டவாழ்க்கை பண்ணியும்
தாடிவைத்து மொட்டைதட்டி தவசியென்ற பேருடன்
தரணிமெச்ச ஊர்கள் சுற்றி தரும போதம் கூறியும்
கூடுவிட்டு கூடுபாயும் சித்து செய்யக் கோரியும்
கோடிகாலம் வாழ எண்ணி காயகற்பம் தேரியும்
தேடுகின்ற உண்மையாவும் ஓடிவந்து நிற்குமே
தெய்வவாக்கு வள்ளுவன் திருக்குறள்கள் கற்கவே

(3) அன்புதந்து அருள் விளக்கி அறிவு சொல்லும் அறமொழி
ஆன்ம ஞானம் என்று சொல்லும் அதையும்சேரப் பெருவழி
துன்ம மென்ற உலகவாழ்வின் துயரம் ஏதும் வந்திடில்
துணைபுரிந்து அருகிருந்து தோது சொல்லும் மந்திரி
இன்பம் என்று தவறுசெய்து நோய்கள் சேரக்கண்டதும்
இடைபுகுந்து மாற்றுரைத்து இடரை நீக்கும் பண்டிதம்
தெம்புமிக்கத் தூயவாழ்வின் தெளிவு காட்டும் பண்பதாம்
தெய்வஞான வள்ளுவன் **திருக்குறள்கள்** என்பவாம்.

வாழ்த்துச் செய்திகள்

பி. டி. ராஜன்

"பாளையம் இல்லம்'
தல்லாகுளம் P. O.,
மதுரை—2
5—5—1969

திரு. ஆறுமுகம் அவர்களுக்கு,

திருவள்ளுவர் நினைவு மலர் வெள்ளிவிழா வெளியீட்டை பிரசுரிப்பதற்குத் தாங்கள் எடுத்துள்ள முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

மக்கள் சிந்தனையைக் கிளறி பொய்யினின்றும் மெய்மையை ஆராய்ந்தெடுக்கும் மனப்பான்மையை திருக்குறள் வளர்க்கிறது. ஆகவே உலக மக்களுக்கெல்லாம் பொது நூலாக விளங்குகிறது.

பிறநாட்டு மக்களிடம் திருக்குறள் கருத்துக்களைப் பரப்புவதற்கு முன், தமிழ் மக்கள் வள்ளுவர் வகுத்துள்ள சீரிய முறையில் தங்கள் வாழ்வை நடத்த முற்பட வேண்டும். அதுவே திருவள்ளுவருக்கு நாம் செய்யும் நன்றியும் அஞ்சலியுமாகும்.

வெள்ளி விழா மலர் குறள் கருத்துக்களுடன் பூத்துப் பொலிவதாக!

தங்கள் அன்புள்ள,
பி. டி. ராஜன்

வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்,
பெருந்தலைவர்,
புள்ளம்பாடி பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றம்.

வெள்ளனூர்,
இடங்கிமங்கலம் அஞ்சல்,
லால்குடி வட்டம்.
13—5—69

அன்புடையீர், வணக்கம்.

திருக்குறள் மணிப்பதிப்பகம் வாயிலாக தாங்கள் ஆண்டுதோறும் திருவள்ளுவர் நினைவு மலர் வெளியிட்டு வருவது தமிழ் மக்கள்பால் தாங்கள் கொண்டுள்ள பற்றின் காரணமாகும். இப்பற்றை தாங்கள் முறையாக வளர்த்து தமிழ் மக்களும் ஏற்று வந்துள்ள காரணத்தால்தான் இம்மலர் இவ்வாண்டு "வெள்ளி விழா ஆண்டு மலராக" வெளிவருகிறது. மலரின் மணத்தை அனைவரும் நுகர்ந்து வெள்ளி விழா மலர் பொன்விழா மலராக வளர்ச்சியுற என் வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ்! வளர்க வள்ளுவர் நெறி!!

அன்பன்,
வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்

Miss. R. Rajamani, B.A. (Hons.), L.T.,
Retired Lecturer

87, New Street
Srirangam, Trichy Dt.
14—5—69

உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளானது எந்நாட்டினருக்கும் எம்மொழியினருக்கும் எச்சமயத்தினருக்கும் எச்சாதியினருக்கும் ஏற்றநூல் என்பது யாவருக்கும் உடன்பாடாகும். பொய்யில் புலவராம் வள்ளுவப் பெருந்தகை இத்தகைய ஒப்புயர்வற்ற கருவூலத்தை உலகிற்கு வழங்கிச் சென்றது நம் நாடு செய்த நல்வினைப் பயனேயாகும். அதனலன்றோ 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று சிறப்பித்துப் பாடினர் அமரகவி பாரதியார். திருக்குறளின் பெருமையைப் பரப்பும் பொருட்டு எண்ணிறந்த கழகங்கள் ஆங்காங்கே தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த லால்குடியிலுள்ள திருக்குறள் மணிப் பதிப்பகமாகும்.

திருக்குறள் மணிப் பதிப்பகமானது சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் சீரிய தொண்டாற்றி வந்துள்ளது. பதிப்பகத்தின் வெள்ளி விழா அண்மையில் நடைபெறவிருக்கிறது. பதிப்பகமானது அரசாங்கத்தின் ஆதரவையும் அயல்நாட்டறிஞரின் தொடர்பினையும், வணிகப் பெருமக்களின் நன்மதிப்பையும், பொதுமக்களின் ஒத்துழைப்பையும் கொண்டு முன்னேறி வருவது பெரிதும் போற்றற்பாலது.

சிறந்த முறையில் வெளிவரும் வெள்ளிவிழா மலரைப் பேரறிஞரது கட்டுரைகளும் வாழ்த்துரைகளும் அணிசெய்யா நிற்கும்.

தக்கார் தலைமை தாங்க, அறிஞர் பலர் விரிவுரை யமுதம் வழங்க, விழா நன்முறையில் நடந்தேற எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

வாழ்க தமிழ்மொழி !

R. இராஜாமணி

இச்சியடி விநாயகர் கோயில்
திருத்தவத்துறை (லால்குடி)
25—5—69

திருத்தவத்துறை என்ற தலப் பெயர் வாய்ந்த இலால்குடியில் பல ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் கழகம் தோன்றி தொண்டாற்றி, தமிழ் நாட்டிற்கே அக்கழகம் வழிகாட்டியாக இருந்துள்ளது. அதன் தொடர்பாக தோன்றிய வெளியீடே திருவள்ளுவர் நினைவு மலர். இம்மலர் தோன்றி 25 ஆண்டுகள் ஆயின. அதன் வெள்ளி விழா வெளியீடு விரைவில் வெளிவர இருப்பது அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம். திருக்குறள் மணி L. S. ஆறுமுகம் இத்தொண்டை விடாது தொடர்ந்து செய்து வருவதற்காக அவரைப் பாராட்டுகின்றோம்.

மலர் மணம்பெற்று மென்மேலும் வளர்ச்சியுற்று திருக்குறள் நெறி நாடெங்கும் பரவ துணைசெய்யுமாறு வாழ்த்துகின்றோம்.

சமரச சன்மார்க்க சங்கத்தார்,
லால்குடி.

ஈராயிரம் ஆண்டு

[புலவர் மா. அய்யாவு, தமிழாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, திருமழபாடி, திருச்சி மாவட்டம்]

திருவள்ளுவர் மிகச் சிறந்த கவிஞர். உலகக் கவிஞர்களுள் பெருமை மிக்கவர் வள்ளுவர். எனவேதான், பலமொழிகளை நன்கு படித்த பெருமக்கள் தமிழின்பெருமையையும், தமிழ்ப் புலவரின் பெருமையையும் பாராட்டிப் பேசினார்கள். சில நூல்கள் சுவைக்காகவும், சில நூல்கள் அறிவுக்காகவும், சில நூல்கள் நீதிக்காகவும் எழுதப்பட்டிருக்கும். ஆனால், திருக்குறளோ சுவை, அறிவு, நீதி முதலிய எல்லாவற்றிற்கும்ஏற்ற ஒப்பற்ற நூலாக விளங்குகின்றது.

வள்ளுவர் காலத்தில் அவரோடு வாழ்ந்த புலவர்களும், பிற்காலத்தில் வாழ்ந்தவர்களும் திருவள்ளுவரையும், அவரது நூல்களையும் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

கவுணியார் என்ற புலவர், ''முற்பட்ட நல்வழியை நாமெல்லாம் தெரிந்து கொள்ள, திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் மனத்திற்கு இன்பஞ் செய்வன; கேட்டாற் காதுக்கு இன்பம் செய்வன; வாய்க்கும் இன்பம் செய்வன; மேலும், தொடர்ந்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்கும் மிகச் சிறந்த மருந்துகளாகும்''என்று பாராட்டுகின்றார்கள்.

''சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள் வெண்பா''

என்பது அவரது செய்யுள்.

இதுபோலவே, ''வள்ளுவனார் தம் வாயாற் கேளாதனவெல்லாம் கேட்டு, அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின் திறனறிந்தேம் வீடுதெளிந்தேம்'' என்று பேசுகின்றார் ஒரு புலவர்.

''ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்
—போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க் கேட்க வீற்றிருக்கலாம்''

என்றார் புலவர் நத்தத்தனார்.

மாமூலனார் என்ற புலவர், ''அறம் பொருளின்பம் வீடென்னும் அந்நான்கின் திறம்தெரிந்து செப்பிய தேவனை மறந்தும் ஒரு மனிதனாக நினைந்து, வள்ளுவன் என்று, சொல்லுதற்கு ஒருவன் இருந்தால் அவன் அறிவிலி'' என்று பேசுகின்றார்.

இவ்வாறு வள்ளுவரையும், அவரது நூலையும் பாராட்டிப் பேசும் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டும்.

நிற்க, திருக்குறளில் காணப்படும் கருத்துக்கள் பெருமை மிக்கவை. அவை காட்டும் வழியில் நின்று, நன்மை பெறுவதுமக்கள்கடமை.அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை முதலிய தலைப்புக்களில் காணும் கருத்துக்களைப் பார்ப்போம்.

''அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்'' என்கிறார் வள்ளுவர். வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கண் காதலுடையனாதல் அன்புடைமையாகு''மென்பது பரிமேலழகருரையாகும். ''அன்புடையவர் என்பும் உரியர் பிறர்க்கு'' என்றும், ''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்'' என்றும் காணப்படும் கருத்துக்கள் உயர்ந்தவையாகும். மக்களிடத்தே அன்புஇல்லையேல் வாழ்வு இல்லை. அடியார்களும் மற்றவர்களும் அதையே பேசினார்கள். அன்பு இல்லாதவர்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம்: உயிர் நின்றனவாகா. அன்பு முதலாக அதன்வழி நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாவதாகும். வள்ளுவர் கருத்துக்கள் வலிமை மிக்கவை.

''மனைவியோடும் தங்கியிருந்து வாழ்வதெல்லாம் எதற்கென்றால் விருந்தினரைப்பேணி, அவர்கட்கு உதவும் தன்மைக்கேயாகும்'' என்கிறார் வள்ளுவர். விருந்தின் தன்மையை வள்ளுவர் எவ்வாறு கூறுகின்றார்? சமுதாய வாழ்க்கைக்கு எத்தகைய வழியைக் காட்டுகின்றார்? ''சாவாமைக்குக் காரணமாகிய

மருந்தாக இருந்தாலும், விருந்தினர் வெளியேயிருக்கத் தானே உண்டல் விரும்பும் தன்மையுடையதன்று'' என்ற செய்தியைச் சிந்திப்போமாக?

''இன்சொல்'' என்றால் என்ன? என்ற வினாவிற்கு விடையளிப்பதுபோல் அழகான செய்தியைத் தருகின்றார் ஆசிரியர். ''இன்சொலாவன அன்போடு கலந்து வஞ்சனையிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற்சொற் களேயாகும்'' என்ற செய்தியைச் சிந்திப் போமாக!

''அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்''

என்றார் வள்ளுவர்.

''ஒருவன் கண்டபொழுதே முகமினி யனாய் அதனோடு இனிய சொல்லையு முடையனாகப்பெறின் நெஞ்சுவந்து ஒரு வற்கு வேண்டிய பொருளைக் கொடுத்த லின் நன்று'' என்பது பொருள். இன் முகத்தோடு கூடிய இன்சொல்லை வழங்க ஈதலைப்போலப் பொருளை இழக்க வேண் டியதில்லை. இருந்துங்கூட உலகில் எத்தனை பேர் மக்களிடத்தே இன் சொல்லை வழங்க முற்படுகின்றார்கள்? அது அரிதினும் அரிதாக உள்ளதே?'' என்று கேட்கிறார். இத்தகைய கருத்தை மிகச் சுருக்கமாகச் சொல்லி, அதே நேரத்தில் வன்மையாக வற்புறுத்துகின் றார் ஆசிரியர்.

இன்சொல்லைப்பற்றிச் சொல்லு கின்ற தலைப்பில் பணிவுடைமையும் சேர்த்து, ''ஒருவனுக்குச் சிறந்த அணி யாவது, பணிவுடைமையும் இன்சொலு மேயாகும். இவையன்றி வேறு அணிக ளில்லை'' என்று பேசுகின்றார் ஆசிரியர்.

மேலும், இன்சொல்லைவிட்டு, வன் சொல்லைப் பேசுவது ''கனியிருப்பக் காய்கவர்ந்தற்று'' என்று கூறுகின்றார். அதுமட்டுமல்ல, ''பிறர் கூறும் இனிய சொல் தனக்கு மகிழ்ச்சி தருவதைக் கேட்டு, மகிழ்ந்தவன் வன்சொல்லைச் சொல்லுவது ஏன்?'' என்று கேட்கிறார் வள்ளுவர். உள்ளத்தைத் தொட்டுப் பேசும் ஆசிரியரது அறிவையும் ஆற்றலை யும் நினைந்து நன்மை பெறுவோமாக!

''ஒருவர் செய்த நன்மையை மறப் பது அறனன்று. அதேநேரத்தில் அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது நன்று ஆகும்'' என்கிறார் ஆசிரியர்.

இதுபோலவே, நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஈகை, புகழ் மற்றும் கல்வி, கல்லாமை, கேள்வி முதலிய தலைப்புக்களிலிருந்து மிகச் சிறந்த கருத்துக்கள் கிடைக்கப் பெறுகின்றன. அவை நம் உள்ளத்தைத் தெளிவுபடுத்தி வளரச் செய்கின்றன.

மற்றும் திருக்குறளில் காணப்படும் உவமை, உருவகம், பிறிதுமொழிதல், வஞ்சப்புகழ்ச்சி முதலிய அணிகள் எல்லை யற்ற கருத்துக்களைத்தந்து அறிவையும், மகிழ்ச்சியையும் தருவனவாகும். அவற் றைப் படித்து நன்மை பெறுவோமாக!

வள்ளுவர் ஈராயிரமாண்டு விழா நாடெங்கும் சிறப்பாக நடந்து வருகின் றது. இதையொட்டி கருத்தரங்கம், பட்டி மன்றம், சொற்பொழிவு, உரைக் கோவை முதலியன நடந்து வருகின்றன. இவற்றைக் கேட்டும், அறிந்தும் மக்கள் மகிழ்ச்சிபெறுவதோடு அறிவும், சிந்தனை யும்பெற்று வாழ்வோமாக?

வாழ்க தமிழ்! வாழ்க வள்ளுவம்!

சிந்தைக் கினிய செவிக்கினிய
வாய்க்கினிய
வந்த வருவினைக்கு மாமருந்து
–முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை
வள்ளுவனார்
பன்னியவின் குறள் வெண்பா. –கவுணியனார்.

வள்ளுவர் கண்ட நட்பு

[திருச்சி திரு. பொ. மாணிக்கவாசகம்]

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் ஈராயிரப் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டம் நாளது ஜூலையில் சிறப்புற நம் தமிழகத்தில் நடைபெறும் செய்தி கேட்டு மகிழ்வு எய்துகிறோம். ஆகவே, அவரை நினைப்பதும் அவர் தந்துள்ள மாபெரும் பொக்கிஷத்தையும் பல தடவை சிந்திப்பதும் சாலப் பொருத்த மாகும்.

நட்பு என்பது நண்பர் இருவர் அல்லது பலரிடம் குடிகொள்ளும் உள்ளத்தின் நெகிழ்ச்சியாம். இவ்வித நட்பு புன் சிரிப்பு, முறுவல் முதலிய வெளி வேடத்தால் காட்டக்கூடியதல்ல. உள்ளத்தின் அன்பாலே காட்டுதல் வேண்டும். இது பற்றியே நமது திருவள்ளுவரும்

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என்று கூறியுள்ளார். ஆதலால் நண்பர்கள் கண்டிப்பாய் அவசியமாய் உள்ளத்தில் அன்புகொண்டு நடந்துகொள்ள வேண்டும்.

ஒருவன் தீச்செயல்களிற் செல்லும் போது அவ்வாறு செல்லாமற் தடுத்து நல்வழிகளிற் செல்லத் தூண்டுதலும், அவனுக்கு யாதாயினும் கேடு உற்ற காலத்தில் அதைத் தடுக்க முயலுதலும், அது முடியாவிடில் அதனல் வருந் துன்பத்தை அவனேடு கூடி தானும் அனுபவித்தலும், எக்காலத்தும் வேறுபடா திருத்தலும் ஆகிய இவை முதலிய நற் குணங்களை உடையவனே நண்பன் ஆவான். மன ஒற்றுமையுடைமையே நட்பு விருத்திக்குக் காரணமாம். பெரியவர்களுடைய நட்பு பிறைபோல் நாளொரு வண்ணமாக வளர்ந்து கொண்டுவரும். கரும்பு நுனியிலிருந்து தின்பவனுக்கு மேலே தின்னத் தின்னச் சுவையை மிகக் கொடுத்துக்கொண்டு வருவதுபோல நல்லோருடைய நட்பும் பழகப் பழக உறுதியையும் மன மகிழ்ச்சியையும் மிகவும் கொடுத்துக்கொண்டு வரும். இவ்வியல்புடைய நட்பைப் பெறுதல் மிகுந்த அருமையாம்.

ஒருவரோடொருவர் சிநேகஞ் செய்தல், தகாத செயல்கள் காணப்படுமிடத்து இடித்துப் புத்தி கூறி நல்வழிப் படுத்தற்கன்றித் தம்முட் சிரித்து விளையாடுதற்கன்று. கண்டவிடத்து முகமாத்திரம் மலரும்படி சிநேசிப்பது சிநேகமன்று; மனமும் மகிழும்படி சிநேகிப்பதே நட்பாகும்.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"

என்னும் குறளை சிந்திக்க வேண்டும்.

ஒருவருடைய குணங்களை ஆராயாமற் நட்பு செய்யலாகாது. ஆபத்துக் காலத்தில் கைவிடுவோரையும், தமக்கு பயனுள்ள காலத்தில் வந்து கூடியும். அது இல்லாத காலத்தில் விட்டு நீங்குவோரையும், மூடரையும் சொல்லொன்று செயலொன்ருயிருப்போரையும் சிநேகஞ் செய்யலாகாது. இதனுலன்ருே ஔவையாரும்

"நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்"

என்று அருளியுள்ளார். இன்ப துன்பங்கள் மனத்தில் அடைபட்டுக்கிடப்பதும், ஒரு பிணியாம். "மனக்கவலை பலக் குறைவு" — மனத்தில் அடையப்பட்டிருக்கும் இன்ப துன்பங்களை வெளிப்படுத்துவதே மன நோய்க்குச் சிறந்த மருந்து. ஆயினும் இவைகளை வெளிப்படுத்துவதற்கு ஒரு போக்கு வீடு வேண்டும்; அங்ஙனம் போக்கு வீடு ஆகின்றவனே உண்மை நண்பனுவன். உண்மை நண்பனிடத்தில் உள்ளத்திலுள்ளதைச் சொல்லிக்கொள்வதால் நன்மைகள் இரண்டு உளவாம். துன்பம் பாதியாகக் குறையும். உவகை ஒன்றிரண்டாம் நண்பனே எதற்கும் ஏற்ற வெற்றி சூழ்ச்சி சொல்லுவதற்குரியவன்.

நீர் சேர்ந்த பாலை நெருப்பில் வைத்துக் காய்ச்சும்பொழுது நீர் சுவறுகின்றது, அதுகண்டு தன்னுடன் சேர்ந்த நீருக்கு நேர்ந்த துன்பத்தைச் சகிக்காது கலத்தின்மேல் பொங்கி அக்கினிப் பிரவேசம் செய்யமுயலுகின்றது. அப்போது சிறிது நீரைக் கலத்தில் தெளித்தால்

''தம் நண்பன் உயிர்த்தெழுந்தான்'' என்று அந்தப் பால் அடங்குகின்றது. அதுபோலவே நேயன் சாமானியனுன லும் அவனுக்கு ஒரு துன்பம் வந்துற்ற பொழுது உண்மை சிநேகிதன் அவனுக் குத்துணை செய்யாமலிரான்.

''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

என்று நாயனுர் கூறினுர்.

ஆடையிழந்தவன் கையானது எவ்வித மாகத் துரிதத்துடன் அவ்வாடையைக் கட்டிவிடுகிறதோ, அதுபோல உண்மை நண்பன் தீங்கு வந்தகாலத்து நண்பனைக் காப்பாற்றவே வகை தேடுவான்.

''அற்ற குளத்தி னறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வாருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறு வாருறவு''

என்பதுபோல, இழிந்தோர் பறவைகள் போல் தம் நண்பரின் செல்வமும் இன்ப மும் அனுபவித்து அவர் வறுமையும் துன்பமும் அடைந்த காலத்தில் அவரை விட்டு நீங்கிப் போவர். உயர்ந்தோரோ கொட்டியும் ஆம்பலும் போலத் தமது நண்பர் துன்புற்ற காலத்தில் அவரோடு துன்பத்தை அனுபவித்து அவரைவிட்டு நீங்காதிருப்பர்.

பழுக்கக் காய்ந்த இரும்போடு நீர்த் துளி சேருமாயின் நீர் என்னும் பெயரும் அழிகின்றது. அந்நீர்த்துளி தாமரை இலையின் மீது தங்கியபொழுது அது முத்துப் போலக் காட்சி அளிக்கின்றது. மற்றும் அந்நீர்த்துளியே கடலிலுள்ள சிப்பியின் வாயில் விழுமானல் அது அரசரும் விரும்பிக் கொள்ளும் அரிய விலையுள்ள ஆணி முத்தாகின்றது. இவ் வாறே நமது நட்பை யாரிடம் வைக்கி ருேமோ அதற்குத் தக்க பலனே உண் டாகும். இதனுலன்றோ ''சேரிட மறிந்து சேர்'' என்றனர் ஆன்ருேர்.

அதம, மத்திம, உத்தமர்களுடைய சிநேகமும் இதுபோலத் தானிருக்கின் றன. மூடருடைய சிநேகம் எல்லாத் தீமைகளையும் உண்டாக்குதலாலும் அறி விற்சிறந்த பெரியாருடைய சிநேகம் எல்லா நன்மைகளையும் உண்டாக்குதலா லும் சிறியாரோடு சிநேகம் செய்தலைக் கைவிட்டுப் பெரியாரோடு சிநேகம் செய் தல் வேண்டும். இச்சிநேகிதத்தால் உடை யானுக்கு எவ்வகைப்பட்ட இடர்களும் நீங்கி, எல்லா நன்மைகளும் தாமே உண் டாகும்.

''அழிவினவை நீக்கி ஆராய்ந்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு''

எனவும் கூறியுள்ளார்.

இன்று சமுதாயத்தில் உள்ள சீர் கேடுகளுக்குக் காரணங்கள் பல கூறுவர். அவற்றுள் ஒன்று உயரிய நட்பின் திறத் தை மக்கள் உணர மறுப்பதும் மறப் பதுமேயாகும். நட்பின் திறத்தை உணர் வார் தம் சொந்த வாழ்க்கையைச் செம் மைப்படுத்திக்கொள்வார். உற்ற நண்ப னின் இடித்துரைக்கும் பண்பால் தம் இழிநிலை நீக்கி நன்னிலை எய்துவார். அவர்தம் ஊக்கத்தினுல் நல்வழிகளைக் கைப்பற்றி நாளும் உயர்வார். நல்ல நட்பு சமுதாய மேம்பாட்டிற்குச்சரியான அடித்தளம். சமுதாயம் சீருடனும் பொலிவுடனும் வலிவுடனும் நிலைபெற வேண்டுமானுல் அதற்கு மிகவும் தேவை யான நல்ல நட்பின் திறம் அறிந்து அதனை வளர்த்தாக வேண்டும்.

திருவள்ளுவர் கிறிஸ்தவரா?

[பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ், M.A., அர்ச். சூசையப்பர் கல்லூரி, திருச்சி]

சமயம் என்பது தத்துவம். வெறும் வாய்ப்பந்தல் தத்துவமன்று. உயிர்த் துடிப்புள்ள வாழ்க்கைத் தத்துவம். சமயத்துறையில் தத்துவத்தை வாழ்க் கையில் இணைப்பது திருவழிபாடு. அந்த வழிபாடும் தடந்தெரிந்து கொள்ள முடி யாத சடங்குக் கோவையன்று. சத்தியஞ் சார்ந்ததும் ஆன்மார்த்த ஆற்றல் தரு வதுமான தூய ஒழுக்க முறை. கடவுள், மக்கள், புவனம் என்னும் முப்பொருள் களின் இயல்புகளை உணர்த்துவது சமய அறிவு. இவை ஒன்றுக்கொன்று எவ் வாறு இணங்குகின்றன; எவ்வாறு பிணங்குகின்றன என்பதைக் காட்டும் மெய்யறிவு சமய அறிவு. அகிலத்து மக் கள் ஆண்டவனிடத்துக் கொள்கிற ஆன்மநேய உளவுரிமைத் தொடர்பே சமய ஒழுக்கமாகும்.

திருவள்ளுவர் சமய வேறுபாடுகளை உரைக்க வந்தவரல்லர். அவருக்கு முற் பட்ட சமயங்கள் பிற்பட்ட சமயங்கள் ஆகிய அனைத்துச் சமயங்களிடையே இழையோடிய மூலக் கருத்துக்கள் சில வற்றை அவர் தெளிவுற மொழிந்துள் ளார். அவரிடம் சமயம் கோட்பாடு வேறு, வாழ்க்கைக் கோட்பாடு வேறு என்ற பிளவுபட்ட மனப்பான்மை கிடை யாது. சமயம், வாழ்க்கை, சமுதாயம், அரசு, அறிவு, அறம், இன்பம், துன்பம் ஆகிய யாவற்றையும் இணைத்துக் காணு கின்ற காட்சியே அவர் காணும் கடவுட் காட்சி.

வள்ளுவர் சேசுநாதரை தம் வாழ்க்கை வழியில் சந்தித்தனரோ? அவர் கிறிஸ்தவ சமய நூலாகிய பைபி ளைப் படித்தனரோ? சுத்தானந்த பாரதி யார் கூறுவதுபோல அவர் மயிலாப் பூரில் தாமஸ் முனிவருடன் தொடர்பு கொண்டிருக்கலாம். போப் ஐயர் விழைந்து பார்ப்பதைப் போல, கடல் கடந்து வந்த சமய போதகர்களுடன் தோழமை உசாவியும் அவர்தம் சமயக் கொள்கைகளை அறிந்திருக்கலாம். அவற் றில் சிலவற்றைத் தம் குறட் களஞ்சியத் தில் இணைத்திருக்கலாம்.

அறநூலாகிய திருக்குறளிலும் மறை நூலாகிய பைபிளிலும் ஒத்த கருத்துக்க ளாகச் சில காட்டப் பெற்றுள்ளன. இவ்வாறு ஒப்புமையுடைய பகுதிகள் நம் சிந்தைக்கினிய வியப்பு விருந்து அளிப் பனவாம்.

போப்பையர் திருக்குறளை ஆங்கிலத் தில் மொழிபெயர்த்துள்ளார். அவ்வாறு மொழிபெயர்த்த போது கிறிஸ்துநாதர் அருளிய கருத்துக்களுக்கும் திருவள்ளு வர் மொழிந்த கருத்துக்களுக்கும் ஒற் றுமை கண்டு உளம் மகிழ்ந்துள்ளார்.

ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (156)

தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவர்க்கு ஒருநாள் இன்பமே; பொறுத்தவர்க்கு உலகம் அழியும் வரைக்கும் புகழ் உண்டு.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (314)

இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவர்க்கு நல் லுதவி செய்து, அவருடைய தீமையை யும் தம்முடைய நன்மையையும் மறந்து விடுதலாகும்.

''நானோ உங்களுக்குச் சொல்லு கிறேன்; தீயோனை எதிர்க்க வேண்டாம். ஆனால் யாராவது உன் வலக் கன்னத் தில் அறைந்தால், அவனுக்கு மறு கன் னத்தையும் காட்டு. யாராவது வழக் காடி, உன் உள்ளாடையை எடுத்துக் கொள்ள விரும்பினால், அவனுக்கு உன் மேலாடையையும் கொடுத்துவிடு. யாரா வது உன்னை ஒரு கல் தொலைவரக் கட் டாயப் படுத்தினால், இரு கல் தொலை அவனோடு செல்.''

மத்தேயு 5: 39-41.

இந்த நற்செய்தி வாசகங்களை ஆசிரியர் கலியாணசுந்தர முதலியார் அவர்கள் அழகுபெறக் குறட்பாக்களில் யாத்துள்ளது படித்து இன்புறத் தக்கது.

தீமைக் கெதிர்ப் பளித்தல் தீயதே
என்பன்யான்
தீமைக்குத் தீமையே தீது.

ஒருவனொரு கன்னத்தில் ஓங்கி
அறைந்தால்
மறுகன்னங் காட்டி மகிழ்.

ஒருவனொரு போர்வைக் குழன்று
வழக்கிட்டால்
தருகஅதை அங்கியுடன் தாழ்ந்து.

ஒருவனொரு கல்தொடர உன்னையே
உந்தின்
இருகல் அவனுடன் ஏகு.

தென்னகத்து லட்சியக் குடும்பத் தலைவன் வையத்து வாழ்வாங்கு வாழ்கின்ற அர்ப்பணிக்கப் பெற்ற, வாழ்வு வாழ்கின்றான் (50). அவன் இறந்தவர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் மறப்பதில்லை (42). அவன் மனைவி, வாழ்க்கையின் மங்கலம், தற்காத்துத் தற்கொண்டான் பேணுபவள். குடும்பத்தின் புகழைக் காப்பவள் (அதி. 6). அவன் பிள்ளைகள் பெறுமவற்றுள் சிறந்த பேறு. அவர்தம் மழலைச்சொல் குழலினும் யாழினும் இனிதாவது. அவர்தம் சிறு கைகளால் அளையப் பெற்ற உணவு அமிழ்தத்தைவிட மிக்க இனிமையானது. அவனுடைய மகிழ்ச்சி எங்கே உண்டு என்றால் தம்மினும் தம் மக்கள் அறிவுடையராதலில் இருக்கின்றது (அதி. 7). அன்பு அவன் தன் உயிர்க்கு உயிர். அது அவனுடைய புண்ணியங்களில் முதன்மையானது. உன்னதமானது. அப்புண்ணியங்களின் கூட்டும் ஊற்றும் அன்பே (அதி. 8). அவனுடைய இல்லம் விருந்தினர்க்கெல்லாம் திறந்தமைந்த இல்லம். அவர்களை அவன் புன்முறுவலுடன் வரவேற்கிறான். அவர்களுடன் இனிமையாக உரையாடுகிறான். அவர்களுடன் கலந்துண்கிறான் (அதி.9) அவன் அனைவரின் புகழுக்கும் உரியவன் (அதி. 24). இனிய பேச்சினன் (அதி. 10). செய்ந்நன்றி அறிபவன் (அதி. 11) நடுநிலைமையுடையான் (அதி. 14). தூயவன் (அதி. 15). பொறுமையுடையான் (அதி. 16). பொறாமையற்றவன் (அதி. 17). பேராசைக்கு வயப்படாதவன் (அதி. 18). புறணி பேசாதவன் (அதி; 19). பயனில சொல்லாதவன் (அதி. 20). தீவினை அஞ்சுபவன் (அதி. 21). சமுதாய கடமை தெரிந்தாற்றுபவன் (அதி. 22). ஈகைக் குணமுடையான் (அதி. 23).

இத் தொகுப்புடன் பிலிப்பியர் நிருபம் 4ஆம் அதிகாரம் 6 முதல் 8 வசனங்களை ஒப்பிட முனைவார் போப் ஐயர்.

''எதின் பேரிலும் கவலைப்படாதிருங்கள். ஆனால், எல்லா செபத்திலும் வேண்டுதலிலும் நன்றியறிந்த தோத்திரத்தோடு கூடிய உங்கள் மன்றாட்டுகள் தேவ சமூகத்திற்குத் தெரியவரக் கடவது. அப்படியே எல்லா அறிவையும் கடந்த கடவுளுடைய சமாதானமானது உங்கள் இதயங்களையும் சிந்தைகளையும் சேசுகிறிஸ்துவுக்குள் காப்பாற்றுவதாக. கடைசியாக சகோதரரே எதெது உண்மையோ, எதெது யோக்கியமோ, எதெது நீதியோ, எதெது தூயதோ, எதெது அன்புக்குரியதோ, எதெது நற்கீர்த்திக்குரியதோ, எதெது புண்ணியமோ, எதெது நல்லொழுக்கப் புகழ்ச்சியோ அவைகளைச் சிந்தித்துக் கொண்டிருங்கள்.''

மேலும் சில ஒப்புமைகள்:

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (1)

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக உடையன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

''ஆதியிலே கடவுள் பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தார்.''

(ஆதியாகமம் 1ஆம் அதி. 1 வச.)

ஆரா இயற்கை அவா நீப்பின்
—அந்நிலையே
பேரா இயற்கை தரும். (370)

ஒருபோதும் நிரம்பாத தன்மை உடைய அவாவை ஒழித்தால் ஒழித்த அந்நிலையே எப்போதும் மாறாதிருக்கும் இன்ப வாழ்வைத் தரும்.

''மனத்தரித்திரர் பாக்கியவான்கள். ஏனெனில் வானரசு அவர்களுடையது.''

(மத். அதி. 5 : 3)

ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம்
—காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. (190)

அயலாருடைய குற்றத்தைக் காண்பது போல தம் குற்றத்தையும் காண வல்லவ ராஞல் நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?

''நீ உன் கண்ணிலே உள்ள விட்டத்தைக கவனியாது, உன் சோதரன் கண்ணில் உள்ள துரும்பைப் பார்ப்பதேன்? உன் சகோதரனை நோக்கி, ''உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க விடு' என்று நீ எப்படிச் சொல்லலாம்? இதோ! உன் கண்ணிலே விட்டம் இருக்கிறதே. வெளிவேடக்காரனே, முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்து எறி; பிறகு உன் சகோதரன் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க நன்ருகக் கண் தெரியும்.''

(மத்தேயு 7 : 3-6)

வலியின் நிலைமையான் வல்லுருவம்
—பெற்றம்
புலியின்தோல் போர்த்து மேய்ந்தற்று.
(273)

மனதை அடக்கும் வல்லமை இல்லாதவன் மேற்கொண்ட வலிய தவக்கோலம், பசு புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை மேய்ந்தாற் போன்றது.

''போலித் தீர்க்கதரிசிகள் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள். இவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடம் வருகிருர்கள்; உள்ளுக்கோ பறித்துச் செல்லும் ஓநாய்கள். அவர்கள் பலன்களைக் கொண்டே அவர்களை அறிந்து கொள்வீர்கள்.''

(மத்தேயு 7 : 15-16)

அற்ருர் அழிபசி தீர்த்தல்
—அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி (226)

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

''நீ நிறைவுபெற விரும்பினல்,போய் உன் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக்கொடு. வானகத்தில் உனக்குச் செல்வம் கிடைக்கும்''

(மத்தேயு 19 : 21)

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (978)

பெருமை பண்பு எக்காலத்திலும் பணிந்து நடக்கும்; ஆனல் சிறுமையோ தன்னைத்தானே வியந்து பாராட்டிக் கொள்ளும்.

''உங்களுக்குள்ளே அப்படி இருக்கக் கூடாது. எவன் உங்களுக்குள்ளே பெரியவனுக விரும்புகிருனே அவன் உங்கள் பணியாளனுய் இருக்கட்டும். எவன் உங்களுக்குள் முதல்வனுய் இருக்க விரும்புகிருனே அவன் உங்கள் ஊழியனுய் இருக்கட்டும். இவ்வாறே மனுமகன் பணிவிடைபெறுவதற்கன்று.பணிவிடை புரியவும், பலர் மீட்புக்கு ஈடாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்''

(மத்தேயு 20 : 26-28)

கவிமூலம்

[கவிஞர் திருலோக சீத்தாராம், ஆசிரியர், 'சிவாஜி']

நதிமூலம், ரிஷிமூலம், பெண்மூலம் இம்மூன்றையும் ஆராயலாகாது என்ற விஷயம் தெரிந்தவர்கள் நம்மை நன்ருக எச்சரித்திருக்கிருர்கள். விசாரித்து விஷயம் தெரிந்துகொள்ளமுடியாது என்பது மட்டுமல்ல காரணம். கிடைக்கின்ற விடை பயங்கரமாகவும் சகிக்க முடியாததாகவும் இருக்குமென்பது அடிப்படை. குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்ளக் கூடாதல்லவா?

ஆனல் கவிமூலத்தை ஆராய வேண்டாம் என்று யாரும் தடை விதிக்கவில்லை. முடிந்தால் பேஷாகச் செய்து பார்க்கட்டுமென்று விட்டுவிட்டார்கள். ஏனென்ருல் அது முடியாத காரியம் என்பது அறிஞர்களுக்குத் தெரியும். மற்றவர்கள் இருக்கட்டும்.ஒரு கவிஞனே தனது கவிதையின் மூலத்தை நமக்குக் காட்டிவிட முடியுமா என்பது சந்தேகம். ஏனென்ருல் ஒரு கவிதையில் கவிஞன் நமக்குத் தருவதெல்லாம் சிருஷ்டி பரவசத்தின் கணநேரக் களிமயக்கில் தனது உள்ளொளியில் அவன் கண்ட திருக்காட்சியின் தித்திப்பைப் பற்றிய சேதியே தவிர அந்தத் திருக்காட்சியையே அவன் வழங்கி விடுவதில்லை.எனவே கவிஞன் தனது கவிதையைப் படித்து முடித்த பிறகு மீண்டும் அவனலேயே புகமுடியாத கவியின் மூலஸ்தானத்தை ஒரு விமர்சகன் போய் எட்டிப் பிடிக்க முடியுமென்பது நடவாத காரியம். ஏதோ நமக்குக் கவி கிடைத்ததே என்று அதைக் கொண்டாடி மகிழ்வதுதான் தனது எல்லை – அதிர்ஷ்டம். ஆவிக் கலப்பின் அமுத சுகத்தைக் குழந்தையாக தனது மடியில் தவழவிட்டு மகிழும் தாயிடம், அந்தக் குழந்தையின் சிருஷ்டி விந்தைக்குப் பொருள்விளக்கம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியுமா? அவளுக்குத்தான் அது தெரியுமா?

அப்படியானல் இலக்கிய விமர்சனம் என்பதற்குப் பொருள் கிடையாதா என்று கேட்கலாம். கவிமூலத்தைக் காண முனைவது வேறு, கவியழகை அனுபவிப்பது வேறு. இலக்கிய விமர்சனம் கவிச்சிறப்பை உணர்ந்து வெளியிடும் காரியமாக இருக்கிற வரைக்கும் அது ஒரு இன்பம். கவி மூலம் காணும் 'துணிச்சல்' ஆக அது மாறிவிட்டால் தான் ஆபத்து.

''தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை'' என்ற சித்தாந்தம் ஒன்று இருக்கிறது. இதை நம்பிக் கவி மூலத்தை ஆராயக் கூடாது. கவிதையில் காணப்படும் சில கருத்துக்களை வைத்துக் கொண்டு அந்தக் கவியின் பிறப்புண்மையைப் பிளந்து காட்டிவிட முயல்வது பேதமை. மேலே சொன்ன சித்தாந்தமே பிழைபட்ட ஒன்று. சேலை வேண்டுமானல் நூலைப் போல இருக்கலாம்; பிள்ளை தாயைப் போல இருக்குமென்பது நிச்சயமில்லை. ஏனென்ருல் நெசவு வேலை புத்திக்கும் கண்ணுக்கும் புரிகிற ஒரு கைத்தொழில். உயிரின் படைப்பு மர்மம் இப்படி ஒரு கணக்கில் அகப்படுகிற விஷயமில்லை. கவியும் ஒரு ஜீவ தத்துவம். கவிதையின் அகச் சான்றுகள் போல் தோன்றும் சில சொற்களை நம்பி அதை இயற்றிய கவிஞனைக் கையும் களவுமாய்ப் பிடித்துவிட்டது போலத் தப்புக் கணக்குப் போடக் கூடாது. சிற்றின்ப வேட்கையில் உற்ற தோல்வியின் குரலே திருப்புகழ் என்ற தமது கருத்தை ஒப்புக்கொள்ள மற்றவர்களுக்குத் 'துணிச்சல்' வேண்டுமென்று கூறியுள்ளார் ஒரு கட்டுரையாளர். கவி மூலம் காணப்போய் சேறுபூசிக்கொள்ள அப்படி ஒன்றும் அபாரத் துணிச்சல் வேண்டியதில்லை. இவருக்குமுன், தாங்கள் பூசிக்கொண்ட சேற்றை நெடுக வாரியிறைத்த புண்ணியவான்கள் பல பேர் இருந்திருக்கிருர்கள். திருப்புகழை இதே பாணியில் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு ரசித்த திருக்கூட்டத்தார் தாம் அருணகிரி ஒரு காமுகன் என்ற கதையைக் கட்டிவிட்டிருக்கிருர்கள். அந்தக் கதையை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் அக்கட்டுரையாளரும் 'துணிச்சல்' பெற்றிருக்கிருர். தாசியின் வாயூறலுக்கு அங்காந்திருந்த கோயில்

ஸ்வயம்பாகிதான் கவி காளமேகம் என்றும், காளியின் சூலாயுதத்தால் நாவில் பீஜாட்சரம் பொறிக்கப்பட்ட நிரட்சர குட்சியான ஆட்டிடையன்தான் காளி தாஸ மகாகவி என்றும் அபத்த களஞ்சியமான வரலாறுகளைக் கற்பனைசெய்த கைங்கர்யமே இவர்களுடைய துதான்.

அகச் சான்றுகளைக் கொண்டு கவிஞனுடைய காலத்தையும் வரலாற்றையும் விமர்சனம் செய்ய முயன்ற 'துணிச்சல்' காரர்களின் இலக்கிய அந்தகாரத்திற்கு ஒரு எல்லையே இல்லை. சமீபத்தில் வாழ்ந்திருந்த வடலூர் ராமலிங்க வள்ளலார் இப்படித் 'துணிச்சல்'கொண்ட சம காலத்து வம்புக்காரர் பலருக்கு ஈடு கொடுக்க நேர்ந்த காரணத்தால் நல்ல வேளையாக ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

மனிதர் பல்வேறு வகை இழிகுணங்களாலும் துக்கம், கவலை, துன்பங்களாலும் இடருற்று வருந்தும் சிறுமைகளைத் தன்மையிடத்து ஏற்றிச் சுமந்து அவர் பாடியிருக்கும் 'விண்ணப்பங்கள்' இத்தகைய 'துணிச்சல்'காரர்களால் ஆராயப்பட்டால் விபரீதம் விளையுமே என்று அஞ்சிப் பாதுகாப்பாக அவர் கூறியிருக்கும் தற்காப்புச் செய்யுள் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"இதுவரை அடியேன் அடைந்த வெம்
இடர்களும் துயரமும் எல்லாம் [பயமும்
பொதுவளர் பொருளே பிறர்
பொருட்டல்லாமல்
புலையனேன் பொருட்டல இதுநின்
மதுவளர் மலர்பொற் பதந்துணையறிய
வகுத்தனன் அடியேன் தனக்கே
எதிலுமோர் இம்மி அச்சமும் துயரும்
இடரும் மற்றிலையில எந்தாய்"

தம்மளவில் இல்லாத இழிவுகளைப் பேரருளாளர்கள் எதற்காகத் தம்முடையதாகப் பாவித்துக்கொண்டு பல காலும் புலம்பித் தவிக்க வேண்டுமென்று 'துணிச்சல்'காரர்கள் கடாவுவார்களே—அதற்கும் விடை வைத்திருக்கிறார் வள்ளலார்.

"எள்ளளவில்லையே என்னினும் பிறர்பால்
எய்திய கருணையால் எந்தாய்
உன்னுறு பயமும் இடருமென் றன்னை
உயிருடன் தின்கின்ற தந்தோ
இந்நமிங் கெனக்கிள் விடரொடு பயமும்
இருந்திடில் என்னுயிர் தரியாது"

பிறர் துயரங்களைத் தம்முடையதாக ஏற்றுவருங் கருணையாளர்கள் பிறர் தம் இழிவுகளையும் சுமப்பதுதான் அருளென்னும் தத்துவம். கவிதையை ஆராயப் புகுவோர் தங்கள் தார்க்கிக அறிவை மட்டும் துணைக்கோடல் போதாது. தங்கள் சொந்த நம்பிக்கைகள் துணிச்சல்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு எல்லையற்ற பரிவும் அடக்கமும்கொண்ட மாணவர் என்ற தகுதியுடன் கவி இதயமென்னும் சோலையுட் புகுந்தாலன்றி கவிதைக் காட்சியே சித்திக்காது. பிறகல்லவா கவிமூலம் அறிவது!

பாரதியாரும் தமது குயில் பாட்டின் இறுதியில் 'ஆன்ற தமிழ்ப் புலவீர்! என்றழைத்து வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதானும் சற்றே இடம் இருந்தால் கூறீரோ' என்று ஒரு பெரிய பூட்டையும் போட்டிருப்பது அத்துமீறிப் பிரவேசிக்கும் துணிச்சல் காரர்களை வெளியிலேயே தடுத்து நிறுத்தத்தான்.

வள்ளுவர் வகுத்த வழி

[புலவர். ந. சேதுராமன், தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, குளித்தலை]

முன்னுரை :

மணமிகு மலர்களை மாநிலத்து மக்கள் யாவரும் ஏற்று மகிழ்வர். எழில் மிகு மலர்களை எந்நாட்டு மக்களும் என்றென்றும் போற்றிப் புகழ்வர். உருவும் திருவும் ஒருங்கமைந்த உத்தமர்கள் உயர்ந்த மலர்களை ஒரு நாளும் மறவார். அம்மலர்களை ஆடவர் அனைவரும் தென்றல் திளைக்கும் பூம்பொழில்களில் கண்டு களிப்பார்கள். அம்பேர் நெடுங்கண் களையும் குரவு கமழ் கூந்தலினையுங் கொண்ட மங்கையர் அனைவரும் அழகிய மலர்களை அணிந்து அக மகிழ்வர். அஃதே போன்று உலகினர்க்கு ஓர் ஒப்பற்ற மலராய், என்றென்றும் வாடாத எழில்மிகு மலராய் நின்று நிலவுவது, எந்நாட்டினரும் எம்மதத்தினரும் எஞ்ஞான்றும் ஏத்தும் தமிழ்மறை என்னும் திருக்குறளே யாகும்.

நாயனார் நாத்திகரா ?

பாமரர்க்கும் பாவலர்க்கும் நல்லவர்க்கும் நாவலர்க்கும் கற்றோர்க்கும் காவலர்க்கும் அறிஞர்க்கும் அறநூல் அறிந்தோர்க்கும் பெண்களுக்கும் பிறர்க்கும் அரியதொரு அறம், பொருள், இன்பம் உணர்த்தும் திருக்குறளைத் தந்தவர் தெய்வப் புலவராம் திருவள்ளுவராவார். பொய்யில் புலவன் எனப் புகழப் பெற்ற இவர் இறைப்பற்று இல்லாதவரா? இவர் இயற்றிய கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத் துணையால் ஆராய்வோம்.

இறைவனின் எண்குணம் கண்டோன்

கடவுளைக்கண்ட கவிஞர்களும் ஆண்டவன் அழகில் ஈடுபட்ட அடியார்களும் ஆழ்வார்களும் அவனுடைய புற வழகினையே அதிகமாகப் புகழ்ந்தார்கள். அவர்கள் ஆண்டவனின் அதளாடையைக் கண்டார்கள். ஆனால், நம்பெரு நாவலர் அவன் ஆதிபகவன் என்பதை யறிந்தார். ஆழ்வார்கள் ஐம்படை உடையவனே ஆண்டவன் என்று இயம்பினர்கள். ஆனால், நம் பொய்யாமொழியார் அவன் ஐந்தவித்தான் என்று ஆண்டவனின் அகவழகினையே விளம்பினர்; புறவழகினை அவர் பொருளென மதித்தார் அல்லர். எண்ணுதற்குமரிய எண்குணங்களைப் பெற்றுள்ளவனே ஈசன் ஆவான்; அவனை நாம் வணங்குவோம். அவனை வாழ்த்தாத நாம் பொறிகள் ஐந்தையும் பெற்றிருந்தாலும் அவைகளாற் பெறும் பயன்களடைய மாட்டோம் என்ற கருத்தினைச் செந்நாப் போதார்,

"கோளில் பொறியிற் குணமிலவே
தாளை வணங்காத் தலை" [எண்குணத்தான்

என்று நயம்படக் கூறித் தான் இறைப்பற்று உடையவர் என்ற கருத்தினை அரண் செய்கின்றார். ஆதலின் நாமனை வரும் வள்ளுவர் வகுத்த வழியில் நின்று,

பாமலர் போற்று மாதி பகவனே !
நாவலர் வாழ்த்தும் வாலறி வோனே !
மாமலர் ஏகும் மாண்புடை யோனே !
மாசறு வேண்டுதல் வேண்டாமையிலாய்!
பூமகிழ் பொருள்சேர் புகழுடை யோனே !
பொய்யுடைப் பொறிவாயி லைந்தவித் தோனே !
கோமகிழ் புகழ்சேர் ரொப்பறு நல்லோய் !
பாவ மழிக்கு மறவாழி யந்தணனே !

என்று என்றென்றும் இறைவனின் அக வழகினையே போற்றுவோம்.

மாசற்ற நெஞ்சே அறம்

இனி, இல்லற வாழ்க்கையில் நாம் இன்பமடைந்து இனிது வாழப் பல அறவுரைகள் கூறுகின்றார் நம் பெரு நாவலர். சீமான் ஒருவன் பெறுதற்கரிய செல்வங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்தான். எண்ண வியலாத ஏக்கர் நிலங்களைக்கொண்ட அவன் (ஏகாதசி நாளன்று) ஏழைகளுக்கு அன்னமிட்டான். ஆனால், அவன் எதிர் வீட்டு ஏகாம்பரத்தின் அரை ஏக்கர் நிலத்தையும் ஏலம் போட்டு எடுக்க எண்ணியிருந்தான். பெறுதற்கரிய பொருள்களைப் பெற்ற அச்செல்வன் அகதிகளுக்கு ஆடைகள் அளித்தான். ஆனால் அண்டை வீட்டில் வாழும்

ஆரோக்கியசாமியின் அழகான வீட்டை அடைவதற்குத் திட்டம் திட்டினுன். எனவே, அச்செல்வன் அன்னமிட்டதும் ஆடை ஈந்ததும் ஆரவாரத் தன்மைக்கே யாகும். அறம் என்று சொல்லப்படுவது உண்மையிலேயே ஒருவன் உள்ளத்தில் மாசிலா திருத்தலே யாகும். ஆசுடைய மனம் படைத்த ஒருவன் செய்யும் அறங்கள் யாவும் ஆரவாரத்தன்மை யுடையனவேயாம். இக்கருத்தினை,

"மனத்துக்கண் மாசில னுதல் —அனைத்தறன்
ஆகுல நீர பிற."

என்னும் குறட்பாவில் முதற் பாவலர் நன்கு எடுத்தியம்புகின்ருர்.

விருந்தோம்பல் முறை

பண்டுதொட்டு நந்தமிழர் விருந்தோம்பி வேளாண்மை செய்தனர். அவர்கள் செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருந்தனர். விருந்தினர் வீட்டின் புறத்திருக்கச் சாவாமருந்தே யெனினும் தாமே உண்ணுத தனிப் பெருமை பெற்றிருந்தனர். விருந்து புறந்தருதலால் வரும் பயனை நன்குணர்ந்து நாடோறும் தம் வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கு இன்முகம் காட்டி, இன்சொற் கூறி, நன்ருற்றி வந்தனர். மென்மைத் தன்மை பெற்ற அனிச்ச மலரை ஒருவர் மூக்கருகே வைத்து மோந்து நோக்க அஃது குழையும். ஆனல், வீட்டிற்கு வருகின்ற விருந்தினர் அம்மலரினும் மிகுந்த மென்மை உடையவர்கள் ஆவார்கள். நாம் அவர்களைச் சேய்மைக் கண் கண்டுழி இன்முகங் காட்டியும், நண்ணிய வழி இன்சொல் சொல்லியும், பின்னர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க நன்ருற்றியும் நற்ருெண்டு புரிதல்வேண்டும். அவ்வாறு விருந்தினரைச் சேய்மைக் கண் கண்டுழி இன்முகங் காட்டாது நாம் முகம் மாறுபட்டு நோக்க அன்னுர் குழைவர். இச்சிரிய கருத்தினை.

'மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

எனப் பொதுமறை புகல்கின்றது.

கல்வியின் மாட்சி

மலர்தலை உலகில் நிறைந்துள்ள இருள் அகல விரிந்த கதிர்களைக்கொண்ட பகலவன் குணதிசையில் எழுகின்ருன். அஃதேபோல், மக்கள் உள்ளத்தில் மண்டிக்கிடக்கும் மம்மர் இருளைப் போக்கக் கல்விக் கதிரவன் காட்சி தருகின்ருன். இத்தகைய இம்மை பயக்கின்ற, ஈயக் குறைவுபடாத, மம்மர் அறுக்கும் மருந்தாய், சிற்றுயிர்க்கு உற்றுழியும் கை கொடுக்கும் கல்வியைக் கல்லாத மனிதனும் ஒரு மனிதனே? கேள்வியால் கேட்கப்படாத அவன் செவிகளும் செவிகள் தானே? கேடில்விழுச்செல்வமாய், எழுமைக்கும் ஏமாப்புடையதாய்த் திகழும் கல்வியின் சிறப்புத்தான் என்ன? உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் அதனை நுகர்வான் ஒருவனுக்கே இன்பந் தருகின்றது. ஆனுல், கற்ருேர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பினைத் தருகின்ற கல்வி, அதனை உடையாரையன்றி உலகினர் எல்லோரையுமே இன்பக்கடலில் மூழ்கச் செய்கின்றது. ஆதலின், அற நூல்களைக் கற்றறிந்தார் அனைவரும் பின்னும் அக்கல்வியையே காமுறுவார்கள். இதனை,

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்னும் குறள்வெண்பாவால் தெய்வப் புலவர் உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டுகின்ருர்.

வலியறிந்து வாழ்தல்

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் வகுத்த நம் முதற்பாவலர் அரசர்க்குக் கூறிய அறவுரைகள் பலப்பல. மாற்ருன் நாட்டின்மேல் போர் தொடுக்கத் துணிந்த மன்னன் தான் துணிந்த வினை நேர்மையுடையதாகுமா என்று சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். பின்னர், தனக்கு எத்தகைய படை வலிமை இருக்கின்றது, பகைவனுக்கு எத்தகைய படைபலம் இருக்கின்றது என்பன போன்றவற்றையும் அவன் எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு நாம் போர் தொடுத்தால் நம்மை ஆதரித்து நமக்குத் துணைபுரிய எத்துணை நாட்டு மன்னர்கள் வருவார்கள்? மாற்ருனுக்குத் துணையாக வரும் மன்னர்கள் யாவர் என்பதனையும் சிந்தித்துப்பார்த்த பின்னரே போருக்குப் புறப்படுதல் வேண்டும். இல்லையேல், இன்று இந்தியத்துணைக்கண்டத்தின் எல்லையில் போர் தொடுத்த, எந்நாட்டினராலும் இகழப்படுகின்ற சீனர்களின் நிலைதான்

அம்மன்னனுக்கும் ஏற்படும். இக்கருத்தினையே,

"வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்"

என்று திருவள்ளுவர் தெள்ளத் தெளியக் கூறுகின்றார்.

கொள்ளையனும்—கொடுங்கோலும்

இறுதியாக, நாட்டை ஆள்கின்ற மன்னன் மக்கள் நல்வாழ்வு வாழ நல்ல பல திட்டங்களைத் தீட்டுதல் வேண்டும். வான்பொய்த்து வறுமையால் வாடியிருக்கின்ற மக்கள் மீது வரிச்சுமையை வைத்தல் கூடாது. இவ்வாறு வரிகள் போட்டு மக்களை வாட்டும் மன்னன் வழிப்பறிசெய்யும் கொள்ளைக்காரனுக்கு நிகராவான். அழகார் ஆடகப்பொன் அணிகளை அணிந்து அன்னநடை போட்டு மின்னலிடை ஒசிய நாறுமலர்க் கொம்பு நடை கற்பதென யாருமில்லாத் தனிவழியில் நடந்து சென்ற ஆரணங்கை ஆதித்தன் காயும் வேளையில் வேல் தாங்கிய வீணன் ஒருவன் வழிமறித்து வேல்விழியாளிடம் வேலைக்காட்டிக் கொள்ளையடித்தான். கொடுங்கோல் கொண்டு கொடுமைகள் பல புரிந்து காட்டாட்சி நடத்துகின்ற காவலனும் கூர்விழியாளிடம் கொள்ளைகொண்ட கொலைகாரனுக்கு ஒப்பாவான். இதனை,

"வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு"

எனப் படம் பிடித்துக் காட்டுகின்றார் பொதுமறையார்.

முடிவுரை :

இதுகாறுங்கூறியவாற்றான், நாமனைவரும் இறைப்பற்றுடையவராய் நின்றொழுகுதல் வேண்டும்; மனத்துக்கண் மாசகற்றி நாம் அறம் பல புரிதல் வேண்டும்; கற்றற்குரிய நூல்களைக் கசடறக் கற்றல் நன்று; விருந்தோம்பி வேளாண்மை செய்தால் நாம் பரிந்தோம்பும் பற்றற்றார் ஆவோம்; நாம் மக்கள் வாழ்வை எண்ணி மாற்றான் வலியறிந்து செங்கோன்மை பூண்டு வாழுதல் வேண்டும். இன்ன பல நல்லுரைகளை நமக்கீந்த வள்ளுவரின் வழிநின்று நாம் வையகத்தில் வாகைசூடி வாழ்வோம்.

வணக்கம்!

வாழ்க தமிழ்மொழி!

வள்ளுவர் பேசப்படுகிறார்

[திரு. நா. பார்த்தசாரதி, ஆசிரியர், 'தீபம்', சென்னை]

நூற்பயன் :

திருக்குறளும் அதை இயற்றிய திருவள்ளுவரும் இப்போது, முன்பு எப்போதும் இல்லாதபடி அதிகம் பேசப்படுகிறார்கள். குறள் எதற்காக எழுந்த நூல்? பேசப்படுவதற்கு எழுந்த நூலா? பாடி இசைத்து மகிழ்வதற்கு எழுந்த நூலா? விவாதித்துப் பட்டிமன்றம் நிகழ்த்துவதற்கு எழுந்த நூலா? பின் எதற்காக எழுந்த நூல்? கடைப்பிடிக்கவும், அதன்படி ஒழுகவும் உண்டாக்கப்பட்ட நூலை இந்த நூற்றாண்டில் வெறும் மேடைப் பேச்சுப் புத்தகமாகஆக்கி, அதனாலேயே மகிழ்ந்து கொண்டு இருக்கிறோம், அற நூலுக்கும் காவியத்திற்கும் அடிப்படையான வேறுபாடுகள் உண்டு. 'விதித்தவற்றைச் செய்' என்றும், 'விலக்கியவற்றைத் தவிர்' என்றும் சமூகத்துக்கு உபதேசிக்கும் கடமையையும், மேன்மையையும் உடையது அந்நூல். நுகர்ச்சிக்கும் இலக்கிய இன்பம் துய்த்தற்கும், நயங்கள் காணுதற்கும் நெருக்கமும் உரிமையும் கொண்டாடுவதற்கும் உரியவை காவியங்களே. இந்த அனுபவ வரையறையை மீறி அறநூல்களை இலக்கிய நுகர்ச்சி நூல்களைப் போல் பயன்படுத்துவோர் தற்காலத்தில் அதிகமாகி வருகின்றனர். அறநூல் கருத்துக்களுள் (Ethics) காவியத்திற்கு (Epic) விதை நெல் போன்றவை. காவியப் பொருளான பாவிகம் (Central idea) அறநூற் கருத்துக்களுள் ஒன்றாக அமையுமாறு காவியம் செய்வதே நம்நாட்டுப் பண்பு. பாவிகத்தைத் தரும் அறநூல் விதை நெல்லைப் போன்றதாகும் என்றால் விளைவு போன்றது காவியம். விதை நெல்லைக் கொண்டு நல்ல விளைவுகள் ஆக்க வேண்டும். விதை நெல்லை விளையாட்டாக வீணாக்கவோ, சிந்தவோ, சிதறவோ கூடாது. திருக்குறளும் எதிர்காலத்தை நன்றாகப் பயிர் செய்ய முன்னோர்கள் சேமித்திருக்கும் விதை நெல்லைப் போன்றதாகும். அதிக வெயிலில் காற்றுப்பட வைத்தாலும் விதை நெல் சத்தழிந்து கெட்டுப் போகும். அதிக மழையிலோ, அதிக ஈரத்திலோ, கண்ட இடத்தில் போட்டாலும் விதை நெல் அழுகிப் போகும், அல்லது முளையிலேயே சீரழியும்.

திருக்குறள் விதை நெல் போன்றது. அதிலிருந்து நீண்ட காலத்துக்குப் பயன்படும் பல நற்பயிர்களைச் செய்துகொள்ள வேண்டும். கடைப்பிடித்து ஒழுகி மரியாதை செய்யவேண்டிய நூல்களைப் பேசியும், பொழுதுபோக்கப் பயன்படுத்தியும் அயரச் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு நூலுக்கும் ஒரு பயன் உண்டு. நூற்பயன் உணர்தலில் பிறழ்ச்சியும், திரிபும் உடையவர்கள் நூல் கற்பதே முடியாது என்று தடுக்கும் துணிவு பழைய தமிழ் இலக்கணப் பெரியார்களுக்கு உண்டு. இன்றோ எதையும் யாராலும் தடுக்க முடியாது. இது குடியரசுக் காலம். நூற்பயனைப் பிறழ உணர்வோரும் இன்று நூலைப் படிக்க முடியும். நூற்பயனைத் திரித்துப் பேசுவோரும் இன்று நூலைப் படிக்கத் தடையில்லை. திருக்குறள் என்பது பன்னூற்றாண்டுக் காலத்து விதை நெல்.

அதை நன்கு பயன்படுத்தத் தக்க நல்லுழவன் கையில் கிடைக்க வேண்டும். நூற்பயன் உணர்வோன் எவனோ, அவனே நல்லுழவன். கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நூலைப் பேசிப் பேசித் திரிவதும் இசை விழாக்களில் இசைத்து மட்டும் மகிழ்வதும், அறம் பெரிதா? அன்பு பெரிதா? என்று கட்சிகட்டி விவாதிப்பதுமாக நடைபெறும் நிகழ்ச்சிகளை இன்று காண்கிறோம்; உணர்கிறோம்.

நூல் நோக்கம் :

திருக்குறளில் சொல்லப்படுவது போன்ற இதே நீதிகளும் அறங்களும் உலகின் பல்வேறு அறநூல்களில் கூறப்பட்டிருந்தாலும் திருவள்ளுவரின் ஒரே சிறப்பு அதைப்பட்டுக் கத்தரித்தாற் போலச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறியிருப்பதேயாகும். தமிழிலேயே திருக்குறள் கூறும் அறங்களையே கூறுகிற வேறு சிறியதும் பெரியதுமான அற

நூல்கள் பல உள்ளன. அவற்றுக்கில்லாத சிறப்பு திருக்குறளுக்கும் திருவள்ளுவருக்கும் எப்படிக் கிடைத்தது என்பதை சிறிது சிந்திக்க வேண்டும். அறநூற் கருத்துக்களைக் கூறுவதில் வள்ளுவர் மேற்கொண்ட இங்கிதமும், உலகியலறிவும் இணையற்றவை என்பது மிகமிக முக்கியமான அம்சம். எதை அழுத்திச் சொல்லவேண்டும், எதை அணைத்துச் சொல்ல வேண்டும், எதை எதோடு இணைத்து எப்படிச் சொல்ல வேண்டும் என்பதில் எல்லாம் வள்ளுவர் தமக்கு ஈடு இணை இல்லாமல் உயர்ந்திருக்கிறார்.

விதித்தன செய்தலும், விலக்கியவற்றைத் தவிர்த்தலுமாக மக்களை நல்வழிப் படுத்துவதே ஆசிரியர் திருவள்ளுவரின் நோக்கம் என்பதைப் பரிமேலழகர் உரைத் தொடக்கத்தில் கூறியிருக்கிறார். திருக்குறளில் கூறிய நல்லவற்றைக் கடைப்பிடித்தலும், அல்லாதனவற்றைத் தவிர்த்தலுமே திருக்குறளைப் படிக்கிறவர்கள் திருவள்ளுவருக்குச் செய்யும் நன்றி. ஆனால், இன்று நாடெங்கும் திருவள்ளுவர் பேசப்படுகிறார். ஆனால், கடைப்பிடிக்கப் படுவதில்லை. அப்படியே கடைப்பிடித்தாலும் கடைப்பிடிக்கிறவர்களின் தொகையோ மிகக் குறைவு. **பேசுகிறவர்கள் கடைப்பிடிப்பதில்லை. கடைப்பிடிக்கிறவர்கள் பேசுவதில்லை.** காந்தியையும், வள்ளுவரையும் புகழுவது ஒரு பாஷனாகி வருகிறது.

நோக்கம் புரிந்து கொள்ளப்படாமல் வெறும் வார்த்தையால் புகழப்படுவதும் பேசப்படுவதும் 'நாகரிகம்' ஆகி வருகின்றன. கொல்லாமை, புலால் மறுத்தல், பொய்யாமை, இன்னாசெய்யாமை, இனியவை கூறல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க முயல்வது புகழ்ந்து பேசுவதை விடச் சிறந்த காரியம். இவற்றைப் பற்றிய சிந்தனைகளில் ஊறாமல், கவிநயம் அனுபவிப்பதற்காக மட்டும் குறளைப் படிக்கிறேன் என்று ஒருவன் சொல்லி விடமுடியாது. அனுபவத்துக்குரிய நூல்கள் வேறு. போற்றி மேற்கொள்ளற்குரிய நூல்கள் வேறு என்று தரம் பிரித்துப் படிக்கவும், கடைப்பிடிக்கவும் கற்றுக்கொள்ளவும் வேண்டும். அப்போதுதான் நூலின் நோக்கத்தைப் பற்றிய தெளிவு ஏற்படும்.

நம்பிக்கையும், விகிதாசாரமும் :

அறநூல்களைப் பொறுத்த மட்டில் நூறு சதவிகித நம்பிக்கைதான் பயனளிக்குமே ஒழிய, விகிதாசார நம்பிக்கை நிச்சயமாகப் பயன் அளிக்காது. இன்று நாடு முழுவதும் எல்லா காரியங்களிலுமே விகிதாசார நம்பிக்கைதான் வைக்கிறார்களே ஒழிய, நூறு சதவிகித நம்பிக்கை என்பது பலருக்குச் சாத்தியமாயிருப்பதில்லை.

'எனக்கு அகிம்சையில் நம்பிக்கையில்லை. ஆனாலும் காந்தியைப் போற்றுகிறேன்'

'எனக்கு மதுவிலக்கில் நம்பிக்கையில்லை. ஆனாலும் காந்தீயத்தில் நம்பிக்கை உண்டு'

'திருவள்ளுவரைப் பிடிக்கும். ஆனால் அவர் கூறுகின்ற பலவற்றை கடைப்பிடிக்க முடியவில்லை'

திருவள்ளுவரைப் பொறுத்த புகழிலும், பேச்சிலுங்கூட விகிதாசார நம்பிக்கை உள்ளவர்களே அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். விகிதாசார நம்பிக்கைகளும், அறைகுறைக் கொள்கைகளுமே மாபெரும் சாதனைகளாகப் போற்றப்படுவதைக் காண்கிறோம். **திருக்குறளை வள்ளுவர் எழுதினார் என்பதை விடத் திருக்குறளாய் வாழ்ந்தபின் அப்படி எழுதினார்** என்பதே பெரிய காரியம். அதனால்தான் திருக்குறளின் பெயர்களில் ஒன்று 'திருவள்ளுவர்' என்றே நூலை எழுதிய கருத்தாவின் பெயராக வாய்த்தது. இப்படி வாழ்ந்தவர் இன்னார் என்று சொல்வதுபோல், கருத்தாவின் பெயரை நூலுக்கு இடும் வழக்கம் இன்று நமக்கு வியப்பை அளிக்கலாம். ஆனால் அந்தப் பழம் பண்பில் நூல் எழுதும் தகுதியே சிறப்பிக்கப்படுகிறது.

> **"யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை**
> **எனைத்தொன்றும்**
> **வாய்மையின் நல்ல பிற"**

என்பது போல் தாம் உணர்ந்தவற்றையே கூறுபவராகத் தம்மை எல்லையாக நிறுத்திக் கொண்டு குறள்களிலேயே திருக்குறள் அப்படி வாழ்ந்தவர் கூறும் அறிவுரையாகுமெனத் தெரிகிறது. விகிதாசார நம்பிக்கை — ஒரு நம்பிக்கையாகவே கருதப்படாத அல்

லது - கணக்கிடப்படாத காலத்தில் வாழ்ந்தவர் வள்ளுவர். எனவே குறளில் விகிதாசார வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாக எங்கும் கூறப்படவில்லை. முழு நம்பிக்கையோடு குறளைக் கடைப்பிடிக்காமல் விகிதாசார நம்பிக்கையோடு 'குறள் வாழ்க! குறள் நெறி வாழ்க!' என்று மேடைகளிலோ பிற யிடங்களிலோ பேசப் புகுவதை இன்று நிறையக் காண்கிறோம். பேசுவதால் குறளின் சிறப்பை நிரூபிக்க முடியாது. வாழ்வதால் தான் நிரூபிக்க முடியும்.

குறளும் சகிப்புத்தன்மையும் :

குறள், சகிப்புத் தன்மையைக் கொண்டாடுகிற நூல். ஆனால், குறள் அதிகம் பேசப்படுகின்ற இன்றோ வாழ்க்கையின் எந்த மூலையிலும் சகிப்புத் தன்மையே காணப்படவில்லை. எந்த அரசியல் வாதிகள் வள்ளுவரைப் பேசுகிறார்களோ அந்த அரசியல் வாதிகளே தங்களுக்கு மாறான கொள்கைகள் உடையவர்களைத் தாக்கவும், துன்புறுத்தவும், கடுஞ்சொல் கூறிக் கண்டிக்கவும் தங்களைச் சேர்ந்தவர்களைத் தூண்டிவிடவும் தயங்குவதில்லை.

> "இன்னா செய்தாரை ஒறுத்தல்
> —அவர் நாண
> நன்னயம் செய்து விடல்"

என்ற குறள் சமூக லட்சியங்களிலெல்லாம் தலைசிறந்த லட்சியமாக மேடைகளில் பேசப்படுகின்றது. ஆனால் நடைமுறையிலோ 'இந்தக் கட்சியார் அந்தக் கட்சியாரைத் தாக்கிக் கொடிக் கம்பத்தை வீழ்த்தினார்கள்' 'ஊர்வலத்தில் கல்லெறி' 'மானேஜரைச் சாப்பிட விடாமல் நாற்பது மணி நேரம் கேராவ் செய்தனர்' என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. 'திருக்குறளைப் பேசுவது குறைந்து அதன்படி வாழ்வது பெருக வேண்டும்'—என்று இப்படிச் செய்திகளைப் படிக்கும் ஒவ்வொரு முறையும் மனம் நொந்தபடி நினைக்கிறோம் நாம். "அதெல்லாம் அந்தக் காலத்துக்கு ஏற்றாற் போல வள்ளுவர் ஏதோ எழுதினார். எல்லாவற்றையுமே நாம் அப்படியே கடைப்பிடிக்க முடியாது. நமக்கு முடிந்ததை மட்டுமே நாம் கடைப்பிடிப் போமே?" என்று லௌகிகமாக ஒரு சமாதானமும் அங்கங்கே அவ்வப்போது கூறப்படுகிறது. திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொன்றிலும் இப்படி ஒரு விகிதம் போட்டுக் கழித்துத் தள்ளிவிட்டால் கடைசியில் கடைப்பிடிக்க எதுவுமே மீதம் இருக்காது. பொய்யாமை, திருடாமை போன்ற குற்றங்களைச் சொல்லும்போது விகிதாசார நம்பிக்கையைக் கண்டிக்கும் வள்ளுவர் கொள்கையைப் பரிமேலழகர் விளக்கி இருக்கிறார்.

"நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாகலின் பொய்சொல்ல நினைப்பதும் திருட நினைப்பதுமே குற்றமாகும்" என்ற கருத்து உரையிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. ஆகவே, பொய்யாமை, கள்ளாமை, கொல்லாமை ஆகிய தலையாய அறங்களை விகிதாசாரமாகப் பேசுவதில் பயனில்லை. பிறருடைய தீமைகளைச் சொற்களால் கூறுவதைக் கூடக் கொலை என்கிறார் வள்ளுவர். ஒரு மாற்றுக் கருத்தைக் கூறினால் கூறிய பிறரைச் சூழ்ந்து அடிக்கவும், உதைக்கவும் துணிகிற அளவு இன்று நிலைமை கெட்டிருக்கிறது. பிறருக்குத் தீமையோ, கெடுதலோ செய்ய வேண்டுமென்று பேசுவதுகூடச் சான்றாண்மைக்கு இழுக்கு என்று கூறும் வள்ளுவரை அதில் விகிதாசார நம்பிக்கைகூட இல்லாத நாம் பேசுவதும் வெட்கப்பட வேண்டிய காரியம்.

> "கொல்லா நலத்தது நோன்மை
> —பிறர் தீமை
> சொல்லா நலத்தது சால்பு"

என்கிறது குறள். புண்படுத்திப் பேசுவது கூடக் கொலைக்கு ஒப்பானது என்று கூறும் மிக உயர்ந்த நாகரிகம் எங்கே? 'எனக்குப் பிடிக்காததைப் பேசினால் உதைக்காமல் விடமாட்டேன்' என வேலொடு நின்றான் மிரட்டுவது போல் மிரட்டும் இன்றைய அநாகரிகம் எங்கே? இரண்டையும் சேர்த்து நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

குறளும் தெய்வ நம்பிக்கையும் :

தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் கூடக் குறளைப் படிக்கமுடியும் என்று கூறப்படுகிறது. வள்ளுவர் எந்த மதத்தினர், எச்சமயத்தினர் என்பதுதான்

ஆராயப்பட்டுக் கொண்டிருக்கிறதே ஒழிய, அவர் 'தெய்வ நம்பிக்கை உள்ளவர்' என்பது எல்லோரும் ஒப்ப முடிந்த கருத்தாகும். அதில் இரண்டாவது கருத்துக்கு இடமே கிடையாது. 'தெய்வ நம்பிக்கை இல்லாத கல்விக்குப் பயனே கிடையாது' என்று திடமாகக் கூறுகிறவர் திருவள்ளுவர்.

"கற்றதனுல் ஆய பயனென்கொல்
நற்ருள் தொழாஅர் எனின்" [வாலறிவன்

என்கிறது அவர் குறள். இன்றே தெய்வம், சமயம், ஒழுக்கம் கற்பிக்கும் ஆசிரியர், ஆள்கிற ஆட்சி, பெற்றோர், பெரியவர்கள், பெண்கள், எதன்மேலும், யார் மேலும் நம்பிக்கையூட்டாத கல்வியைப் பார்த்து மேதைகள் மனங்குன்றிப் போய் வருந்துகிருர்கள். தெய்வ நம்பிக்கை இல்லாமலும் வள்ளுவரைப் போற்றிப் பேசலாம். ஒழுக்கமில்லாமலும் வள்ளுவரைப் போற்றிப் பேசலாம். கள்ளுண்ணுமையில் நம்பிக்கையின்றியும் வள்ளுவரைப் போற்றிப் பேசலாம் என்பதை எல்லாம் காண்கிறேம். எந்த நல்ல கொள்கையையும் முழுமையாக நம்ப வேண்டியதில்லை. ஒரு விகிதாசாரத்துக்கு மட்டும் நம்பினல் போதுமென்ற மனப்பான்மை எல்லாத் துறையிலுமே எப்படியோ புகுந்து விட்டது. 'நம்புவது வேறு, செய்வது வேறு'— என்ற நிலை பெரும் பிழையாகக் கருதப் படாத காலத்தில் நாம் வாழ்கிறேமோ என்றுகூடப் பயமாயிருக்கிறது. சொக்கத் தங்கமே தங்கமா, பதினுன்கு காரட் தங்கமே தங்கமா என்ற கேள்வியைப் போன்றது இது. ஒழுக்கத்திலும் பதினுறு காரட் ஒழுக்கமே போதும் என்று நினைக்கிறவர்கள் இருக்கிருர்கள். ஆனல் திருவள்ளுவர் அப்படி நினைத்த வகையைச் சேர்ந்தவர் இல்லை. விகிதாசார நம்பிக்கையோடு மட்டும் அவர் நூல் எழுதவில்லை. ஒழுக்கக் கேட்டையோ, தவறு செய்வதையோ ஒரு சதவிகிதம் கூட அவர் அனுமதிக்கத் தயாராயில்லை என்பது நன்ருகத் தெரிகிறது.

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

என்று நிலை தவறுவதைக் கடுமையாகவும், கேவலமாகவும் உவமித்துக் கூறியிருக்கிருர் அவர். ஒழுக்கத்தில் விகிதாசார நம்பிக்கை உள்ளவர்கள் திருவள்ளுவரைப் போற்றுவதிலோ திருவள்ளுவரின் அபிமானத்துக்கு உரியவர்கள் போல் தோன்றுவதோ முடியாத காரியம் என்பதை மேற்படி குறளில் அவரே கடுமையாக வற்புறுத்திச் சொல்லுகிற இடங்கள் இரண்டு மூன்றுதான். அதில் மிக மிக முக்கியமான இடம் ஒழுக்கத்தைப் பற்றியது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சிந்தனை, சொல், செயல் மூன்றிலுமே நாகரிகம் வேண்டியவர் வள்ளுவர். மூன்றிலுமே பண்பாடு வேண்டியவர் வள்ளுவர்.

"எண்ணித் துணிக கரு'மம் துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு"

என்று சிந்தனை நாகரிகத்தையும்

"பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்று சொல் நாகரிகத்தையும்

"நன்ருற்றலுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்(து) ஆற்ருக் கடை"

என்று செயல் நாகரிகத்தையும் மிக நயமாகக் கூறியிருக்கிருர் வள்ளுவர். இந்த நாகரிகங்களைப் பேணிப் போற்ருமல் வள்ளுவருடைய பெயரை மட்டும் போற்றிப் பேசுவதில் பயனென்ன இருக்க முடியும்?

பெரியவர்களுடைய உபதேசங்களை மதிக்காமல் அவர்களுடைய பெயர்களை மட்டும் மதிப்பதில் அர்த்தமே யில்லை. அறநூல்களில் விகிதாசார நம்பிக்கை என்பது பாதிக் கிணறு தாண்டுவதைப் போன்றது. பாதிக் கிணறு தாண்டுவது பயனில்லை; அபாயகரமானதாகும்.

சிறிது காலத்துக்கு வள்ளுவரைப் பேசுவதை மறந்து அப்படிவாழ ஆசைப் படுவோம். வள்ளுவர் பேசப்படுவதில் வள்ளுவருக்கும் பெருமையில்லை; நமக்கும் பெருமையில்லை. வள்ளுவர் சொல்படி வாழ்வதே பெருமை. பேசுவதால் வள்ளுவருக்குச் செய்வதைக் காட்டிலும் வாழ்வதால்தான் அதிக மரியாதையை வள்ளுவருக்குச் செய்ய முடியும் என்பது நிச்சயமானது.

வள்ளுவன் அரசியல் வகுத்த அறிஞன்

[கவிஞர், அயிலை திரு. தமிழ்ச் செழியன்]

தூங்காமை துணிவுடைமை கற்றுத் தேர்ந்த
தூய்மைமிகும் அறிவுடைமை அறத்தை விட்டு
நீங்காமை நெருக்கடிகள் சூழ்ந்த போதும்
நீதிமுறை தவருமை கொடுமை எண்ணம்
தாங்காமை நல்லசெயல் செய்வ தற்குத்
தயங்காமை பதவிதனை மட்டும் எண்ணி
ஏங்காமை இன்னபிற குணங்கள் எல்லாம்
இல்லாத அரசியலாற் பயனே இல்லை.

பொருள்பெருகும் வழிமுறையை வளர்த்துப் பேணிப்
புதுத்தொழில்கள் பலப்பலவும் செழிக்கச் செய்து
வரும்பொருள்கள் அனைத்தையுமே வைத்துக் காத்து
வகைதெரிந்து மக்களது நலத்துக் காக
இருள்விலகும் தன்மையிலே இடர்கள் தீர
ஏற்றபடி ஆய்ந்தவற்றைச் செலவ ழித்தல்
அருள்பெருகும் அரசினது கடமை என்றே
அறமுரைத்த வள்ளுவனின் குறள்நூல் சொல்லும்.

நாடாள வந்தவரைச் சூழ்ந்து நிற்கும்
நல்லபல வெற்றியெலாம் வேலால் அல்ல
கோடாத செங்கோலின் திறத்தி னலே
குவிகின்ற வெற்றிக்கோர் இணையே இல்லை
கூடாத கொலைவெறியை நெஞ்சில் கொண்டு
குதிபோடும் போரொன்றே நினைப்போர் எல்லாம்
ஏடாளும் குறள்தன்னை எண்ணிப் பார்த்தால்
ஏதய்யா துன்பங்கள் வாழ்வில் இங்கே?

உள்ளத்தால் பொய்யாதான் வாழ்க்கைக் கிந்த
உலகத்தார் மனமெல்லாம் கோவில் ஆகும்
கள்ளத்தால் வஞ்சத்தால் வாழ்வோர் கொண்ட
கதையெல்லாம் வருகின்ற சாவில் தீரும்
வெள்ளத்தால் போகாத கல்விக் கேற்ற
விளக்கத்தால் அரசிங்கே அமையும் என்ருல்
கொள்ளத்தான் இடமின்றிப் புகழும் சேரும்
குறள்மொழியைச் செயலாக்கி வாழ்வோம் வாரீர்.

திருக்குறள் தீந்தமிழ்த் தேன்விருந்து!

[புலவர். முத்து. வெங்கடேசன்]

முப்பால் ஒளியில் முழுவாழ்வைக் காண்பீரால்!
எப்பாலும் போற்றும் இனிய குறளமுதைத்
தப்பாமல் கற்ருல் தருமம் தழைக்காவோ!
தண்ணந் தமிழ்ச்சுரங்கம் தந்திட்ட தங்கத்
திருக்குறள் வாழ்க்கை சிறப்பெல்லாம் நல்காவோ!
தென்னர் குறளாசான் தீந்தமிழ்ச் சொல்மருந்து
தேயாத நல்மனத்தைச் சிந்திக்க வைக்காவோ!
வாய்மைக் குறள்வழியில் வண்ணத் தமிழ்வழியில்
ஓயாத வீன்கவலை ஓடியே போகாவோ!
பாய்ந்தோடும் நல்லெண்ணம் பண்பாடு தோற்றுவித்துப்
பண்பாளர் வாழப் பசியவளம் காட்டாவோ!
வஞ்சம் பொருமை வறுமைமனங் கொண்டோரைக்
கொஞ்சும் குறள்தான் குணக்குன்ருய் மாற்ருவோ!
அறத்தால் பொருளீட்டி அன்பால் புகழீட்டும்
ஆய்ந்த வழிகாட்டி வாய்ந்த குறளன்ருே!
வாழ்வின் இலக்கணத்தை வள்ளுவர்போல் யார் சொன்னர்?
வாழும் நெறிமுறைகள் வாடா மலர்களெனத்
தோய்ந்த தமிழில் துளங்கவைத்தார் வள்ளுவர்காண்!
தூய மனத்தில் துடிப்பாய் எழுந்திட்ட
சாயாத மாணிக்கத் தத்துவத்தின் மாளிகையே
இன்பக் குறளென்ருல் எவரே மறுத்திடுவார்?
துன்பச் சுமைநீங்கச் சொல்லில் வழிசொன்ன
வித்தகத்தின் வேந்தர் விளங்குபுகழ் வள்ளுவரின்
பாதையிலே சென்ருல் பனிப்படலம் நில்லாது!
பாரெல்லாம் வாழும்! பகையென்ற சொல்வீழும்!
நல்லமன வள்ளுவர்க்கு நாட்டில் சிலை கண்டோம்!
வள்ளுவர்க்குப் பொற்சிலையை வார்த்தெடுத்தால் போதாது!
வீடாம் மனத்தில் விளங்கு குறட்கருத்தை
நாடும் சிலையாக நாமமைத்தால் நற்பேறு!
பாடிவிட்ட வள்ளுவனர் பண்ணை மனமேற்றிப்
பீடுபெற நின்ருல் பிறப்பால் சிறப்படைவோம்!
'காடு கமழ்கின்ற கற்பூர'ச் சொற்குறளை
வாடும் மனம்வாழ வள்ளுவர்தான் தந்திட்டார்!
தேடக் கிடைக்காத தீந்தமிழ்த் தேன்விருந்தைப்
பாடி நமக்களித்த பண்பாளர் வள்ளுவனர்
நாடிப் பெறுவோம் நலம்.

குறட்பாவும் அருட்பாவும்

[திரு. இராம. இராதாகிருஷிணன், தலைவர், மாவட்ட சமரச சன்மார்க்க சங்கம், திருச்சி]

திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு நிறைவு விழா நாடெங்கிலும் சிறப்பாகக் கொண்டாப்படுவது நமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவல்ல சீரிய கருத்துக்களைக் கொண்ட பெருநூல் திருக்குறள். அளவில், சிறியதாய், பொருளில் பெரியதாய் உலகம் முழுமைக்கும் உரியதாய் அமைந்த குறளை இன்று உலகம் பெருமைப்படுத்துகின்றது. எம்மதத்தவருக்கும், எந்நாட்டவர்க்கும், எக்காலத்தவர்க்கும் பொருந்தக்கூடிய அறநூலாகத் திருக்குறள் திகழ்கிறது. இத்தகு சிறப்பியல்புகள் கொண்ட நூலை யாத்த வள்ளுவப் பெருந்தகைக்குச் சிறப்பான விழாக்கள் எடுப்பது நமது கடமையாகும்.

இவ்வாறு விழா எடுக்கின்ற நாம் வள்ளுவனை வாழ்த்துவதோடு நம் வேலையை நிறுத்திக் கொள்ளாமல், அவன் கூறிய வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் நம்முன் தோன்றுவிட்டால், இந்த விழாக்கள் பயனற்றவையாகவே முடியும். உலகம் முழுவதுமே வள்ளுவனின் வழியில் நடக்க வேண்டுமென்று நமது ஆன்றோர்கள் விரும்பினார்கள். எனவே தான்

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து''

என்று பாரதி பாடினான்.

உலகை உய்விக்கும் உயர்ந்த கருத்துக்களை அறிவு வழி நின்று காட்டுகின்ற நூல் குறட்பா. அவற்றையே அருள்வழி நின்று காட்டுகின்ற நூல் அருட்பா. அருட்பாவுக்கும் குறட்பாவுக்கும் உள்ள ஒற்றுமைகள் பல. அவற்றில் சிலவற்றை ங்கு காண்போம்.

இந்த நாகரிக யுகத்திலே ஒழுக்கம் என்பது பேச்சிலே பெருமைப்படுத்தப் படுகின்ற ஒன்றாகவே நினைக்கப்படுகிறது. செயலிலே அதைக் கருதி மதிப்பவர் மிகச் சிலராகவே உள்ளனர். வள்ளுவராகட்டும், வள்ளலாராகட்டும் இருவருமே சொல்லிக் காட்டியதைவிடச் செய்து காட்டியதே மிகுதியாகும். போதித்ததைவிடச் சாதித்ததே அதிகமாகும். இற்றை நாளில் பாமரர்கள் செய்யும் தவறுகளைக் காட்டிலும் படித்தவர்கள்செய்யும் தவறுகளேஎண்ணிக்கையில் அதிகம் எனலாம். தெரியாமற் செய்கின்ற தவறுகளைக் காட்டிலும் தெரிந்து செய்கின்ற தவறுகள் மிகுந்துவிட்ட காலம் இது. கல்லாதான் பயந்து செய்கிற பாவத்தைக் கற்றவன் துணிந்து செய்கிறான். எனவேதான்

"படித்தவன் சூதும் பாவமும் பண்ணினால்
ஐயோ ஐயோ என்று போவான்''

என்று பாரதி புதிய கோணங்கி மூலம் சொன்னான்.

நாட்டிலே நல்லொழுக்கம் நிலவ வேண்டுமானால் படித்தவன் படித்தபடி நடக்கவேண்டும். வாழத்தான் படிக்கின்றோம் என்ற எண்ணம் வளர்ந்து விடுமானால் கற்றதென்றும் சாகாத கல்வியாகும்

"கற்றபின் நிற்க அதற்குத் தக''

என்று கட்டளையிடுகிறது குறட்பா. 'பெருநெறி பிடித்து ஒழுகவேண்டும்'' என்று வேண்டுகோளை விடுக்கிறது அருட்பா. அறிவு ஆணையிடுகிறது. அருள் வேண்டுதல் விடுக்கிறது. வள்ளுவரும் வள்ளலாரும் கற்றபடி வாழ்வதை வலியுறுத்துவதில் ஒருமைப்படுகிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

"அற்றார் அழிபசி தீர்த்தல்''

என்பது வள்ளலாரது திருவாக்காகும். இல்லாதவரை அழிக்க வருகின்ற பசியைத் தீர்த்தல் என்பது இதற்குப் பொருளாகும். உண்டி முதற்றே உலகென்னும் கருத்துணர்ந்த அடிகளார் இல்லாதாருக்கு இரக்கம் காட்டுதலையும் அவர்களது வயிற்றுப் பசியைத் தீர்த்து வைப்பதையும் பெரும் நோன்பாகக்கொண்டிருந்தார்கள். இதனை

"பார்கொண்ட நடையில் வன்
பசிகொண்டு வந்திரப்
பார்முகம் பார்த்திரங்கும் பண்பும்''

என்று அவர்களே குறிப்பிடுகின்றார்கள். பிறர் துன்பம் துடைக்க முனைகின்ற இந்தப் பாங்கை

ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்
செத்தாருள் வைக்கப் படும் [மற்றெல்லாம்

என்று வள்ளுவரும் குறிப்பிட்டிருக்கிருர்.

"உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசுவார் உறவு" என்று பேசுகின்ற வள்ளலார் நட்பினது உண்மைத் தோற்றத்தை அதன் உயர்வை எவ்வளவு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிவிட்டார்.

"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகம்நக நட்பதே நட்பு"

என்ற குறட்பா மேற்சொன்ன அருட்பா வோடு பொருந்தும் அழகை என்னென்பது?

துண்ணெனக் கொடியோர்
பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம்
பயந்தேன்
கண்ணிஞ லேயோ
பிறவுயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும்
பதைத்தேன்

என்பது வள்ளலார் வாக்கு. கொன்ருல் வரும்பாவம் தின்ருல் அதுதீரும்என்பது உலக வழக்காகிவிட்ட காலத்தில் பொய்யை ஒழித்துப் புலாலை வெறுக்கின்ற ஒரு புரட்சியை வள்ளலார் பெரிதும் வற்புறுத்தியுள்ளார்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

என்று வள்ளுவர் பேசுகிருர்.

எல்லா உயிரும் தொழும் பேரொளியாக வள்ளலார் திகழ்கிருர் என்ருல் அவர் குறட்பா வழி நின்று வாழ்ந்த பெருவாழ்க்கையே அதற்குக் காரணமாகும்.

எனவே அருட்பா குறட்பாவையே விரிவுபடுத்தித் தெளிவுபடுத்திப் பேசுகிறது என்பதும், ஆனல் அது அருள் வழிப் பிறந்த வேண்டுகோளாக அமைகிறது என்பதும் அருட்பா காலத்தால் பிந்தியது என்ருலும் கருத்தால் முந்தியது நோக்கத்தால் குறட்பாவைப் போல என்றும் நிலேத்தது என்பதும் இதுகாறும் கூறியவற்ருன் விளங்கும். இவ்விரு பெரு நூல்களேயும் கற்றுத் தேர்ந்து கற்றபடி நடக்க வேண்டியது தான் நாம் மேற்கொள்ளவேண்டிய கடமை என்பதை நினைவில் இருத்துவோமாக.

திருக்குறளும் திருமந்திரமும்

[திரு. க. வெள்ளைவாரணர், துணைப்பேராசிரியர், தமிழாராய்ச்சித்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்]

உலகப் பொதுமறையாகிய திருக்குறள் தெய்வப் புலவர் திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பெற்றது; வையத்து வாழ்வாங்கு வாழும் ஒழுக்க நெறியினை மக்கட் குலத்தார் அனைவர்க்கும் ஒப்ப அறிவுறுத்துவது. சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாந் திருமுறையாகத் திகழும் திருமந்திரம், முக்கால முணர்ந்த செந்தமிழ் முனிவராய்ச் சிறந்த சிவயோகியாராகிய திருமூல நாயனுரால் அருளிச்செய்யப்பெற்றது; அம்முனிவர்பிரான் தவநிலையிலமர்ந்து ஆண்டுக்கொரு பாடலாகத் திருவாய் மலர்ந்தருளிய மூவாயிரந் திருப்பாடல்களைத் தன்னகத்தே கொண்டது; 'நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த, மறைமொழி தானேமந்திரமென்ப' எனத் தொல்காப்பியனுர் சுட்டிய தமிழ் மந்திரச் செய்யுளுக்கு இலக்கியமாகத் திகழ்வது; திருவள்ளுவர் அறிவுறுத்திய உலகியல் ஒழுக்க நெறியினை அடிப்படையாகக்கொண்டு அந்நெறியில் வழுவாது நின்றூர்க்கு நிலவும் மெய்ந்நெறியாகிய சிவ நெறியினைத் தெளிய அறிவுறுத்துவது.

மக்கட் குலத்தார் நன்றுந் தீதும் பகுத்துணரவல்ல நல்லுணர்வுடையராய், மனத்துக்கண் மாசின்றி அறநெறியில் நின்று, ஒழுக்கத்தினை உயிரினும் சிறந்ததாகப் பேணி இவ்வுலகியல் வாழ்வினை இனிது நுகர்ந்துஇன்புறும் பெற்றியினை விரித்துரைக்கும் வாயிலாக உலக மக்கள் பிறப்பென்னும் பேதமை நீங்கிச் சிறப்பென்னுஞ் செம்பொருளைத் தெளிந்து மற்றீண்டுவாரா நெறியாகிய வீடு பேற்றினை எய்தி இன்புறுந் திறத்தினை அறிவுறுத்தும் முறையில் அமைந்தது, திருக்குறள் என்னும் செந்தமிழ் மாமறையாகும். உலகப் பொதுமறையாகிய அந்நூலில் நிலையுடைய வாழ்வுக்கு அடிப்படையாக அறிவுறுத்தப்பெற்ற பொறிவாயிலைந்தவித்தான் அருளிய பொய்தீரொழுக்க நெறியினையும், அந்நெறியின் திறங்களாகிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும், அவற்றைக் கடைப்பிடித்தொழுகுதற்கேற்ற வழி முறைகளையும், அந்நெறிகளில் வழுவாதொழுகுவோர் அடைதற்குரிய இம்மை மறுமை அம்மை என்னும் மும்மை நலங்களையும் தெளிவாக அறிவுறுத்துவது திருமந்திரம் என்னும் மந்திரச் செந்தமிழாகும். உலக மக்களனைவர்க்கும் பொதுவும் சிறப்புமாகத் தமிழில் முதல் நூல்களாகத் திகழும் இவ்விரு நூல்களும், மக்கட் குலத்தார் 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' என்னும் மெய்யுணர்வுடையராய் நல்லொழுக்க நெறியில் நின்று என்றும் நன்றே புரிந்து இம்மை மறுமையின்பங்களை அடைதற்கு அரண் செய்யும் நற்பொருளை யறிவுறுத்தும் முறையில் பொருளொருமை யுடையனவாகத் திகழ்கின்றன. இவ்வுண்மையினை,

> 'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
> திருவாசகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவாசகமென் றுணர்'

என வரும் ஔவையார் வாய்மொழி இனிது புலப்படுத்துவதாகும்.

இப்பொருளொருமையினை யுளங்கொண்டு செந்தமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறளையும் சிவநெறிப் பனுவலாகிய திருமந்திரத்தையும் ஒப்புநோக்கி ஆராயும் பொழுது திருமூலநாயனுர் அருளிய திருமந்திர மாலையில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் சொற்றொடர்களும் கருத்துக்களும் சிறந்த முறையில் இடம்பெற்றிருத்தலைத் தெளிவாகக் காணலாம். எடுத்துக்காட்டாக ஒருசில பகுதிகளை இங்கு நோக்குவோம்.

அறநெறியில் நின்று பொருளை ஈட்டி அப்பொருளால் இன்பம் நுகரும் மக்களது வாழ்க்கை முறையினை அறிவுறுத்த வந்த திருவள்ளுவர், காணப்படாது உயிர்க்குயிராய் உலகினை இயக்கி நிற்கும்

முழு முதற்பொருளாகிய கடவுளது உண்மையினை

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

எனவரும் திருக்குறளில் உவமை வாயிலாக எடுத்துரைத்துள்ளார். எழுத்துக்களெல்லாம் தம்மை உடனின்று செலுத்தும் அகரஒலியினைத் தமக்கு முதலாக உடையன; அதுபோல இவ்வுலகமும் தன்னை உடனின்று இயக்கி நிற்கும் ஆதி பகவனுகிய இறைவனைத் தனக்கு முதலாக உடையது' என்பது இதன் பொருள். எழுத்துக்கள் எல்லாவற்றின் இயக்கத்திற்கும் காரணமாய் அகரம் நிற்பதுபோல, உலகுயிர்களின் இயக்கத்திற்குக் காரணமாய் நிற்கும் முதற்பொருள் இறைவன் என்பது இக்குறளின் கருத்தாகும். இத் திருக்குறட் பொருளை அடியொற்றிய நிலையில்,

"ஆரும் அறியார் அகரம் அவனென்று"
(திருமந்திரம்—1751)

"அகரமுதலாய் அனைத்துமாய் நிற்கும்"
(,, —1753)

எனவரும் திருமந்திரத் தொடர்கள் அமைந்துள்ளன.

எல்லா நூல்களையும் கற்றவர்க்குக் கல்வி அறிவினாலாய பயன் ஞானமே உருவாகிய இறைவன் திருவடிகளைத் தொழுது போற்றுதலாகும். கற்ற கல்வியினும் இனியானுகிய இறைவனை வழிபடாதார்க்கு அன்னோர் அரிதின் முயன்று பெற்ற கல்வி அறிவினாற் சிறிதும் பயனில்லை என்பதனை,

"கற்றதனாலாய பயனென்கொல்
நற்றாள் தொழாஅரெனின்" [வாலறிவன்

என்ற குறளில் திருவள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார். கலைநூல்கள் எல்லாவற்றையும் ஓதிஉணர்ந்தும் உயிர்க்குயிராய் உடனின்று அருள்புரியும் இறைவனைத் தொழும் நற்பேறு இல்லாதவர்களது அறியாமையை எண்ணி இரங்கும் நிலையில் அமைந்தது,

'ஓதியுணரவல்லோ மென்பர் உள்நின்ற
சோதி நடத்தும் தொடர்வறியாதே' (319)

எனவரும் திருமந்திரமாகும்.

அன்பினால் உளங்கனிந்து போற்றும் அடியார்களின் நெஞ்சமாகிய தாமரையிலே அவர்கள் நினைந்த திருமேனி கொண்டு எழுந்தருளியிருத்தல் இறைவனது இயல்பு. இவ்வியல்பினை எண்ணி எல்லாம் வல்ல முதல்வனை "மலர்மிசை ஏகினான்" எனக் குறித்தார் திருவள்ளுவர். இத்தொடர்ப் பொருளை,

'போதுகந்தேறும் புரிசடையான்'
(திருமந்திரம்-632)

'மலருறை மாதவன்" (,, 1531)

"உடந்த செந்தாமரை யுள்ளுறு சோதி
நடந்த செந்தாமரை" —(2484)

எனவரும் திருமந்திரத் தொடர்களில் திருமூலநாயனுர் எடுத்தாண்டுள்ளார். இவ்வாறே,

"பொறிவாயிலைந் தவித்தான்"
(திருக்குறள்–6) என்பதனை

"ஐந்து வென்றனன்" (திருமந்திரம்-1)

எனவும்,

"தனக்குவமையில்லாதான்" (-7)
என்பதனை

"தன்னையொப்பாயொன்று மில்லாத்
தலைமகன்" (திருமந்திரம்-7)

எனவும் திருமூலர் எடுத்தாண்டுள்ளமை காணலாம்.

நல்லறங்கள் எல்லாவற்றுக்கும் நிலைக்களமாய் நின்று அவ்வறங்களை நிகழ்த்துதற்குரிய பேரருளாளனுகத் திகழ்பவன் இறைவனுதலின் அம்முதல்வனை 'அறவாழி அந்தணன்' எனவும் அறக்கடலாய் அருள்வள்ளலாய்த் திகழும் இறைவனது திருவடியாகிய புணையைப் பற்றினார்க்கல்லது பிறவியாகிய பெருங்கடலை நீந்திக் கடத்தல் இயலாது எனவும் அறிவுறுத்துவது,

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்
பிறவாழிநீந்தல் அரிது" [கல்லால்

என்னும் குறளாகும். இக்குறளை அடியொற்றிய நிலையில்,

"பிறவா நெறிதந்த பேரருளாளன்
மறவா அருள்தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதிபராபரன்
உறவாகி வந்தென் உளப்புகுந்தானே"
—(1803)

எனவரும் திருமந்திரப் பாடல் அமைந்திருத்தல் காண்க. அறவாழியந்தணனுகிய இறைவனது திருவருளை உணர்ந்து, அவனருளாலே ஐம்புலன்களையும் வென்று, வேண்டுதல் வேண்டாமையின்றி எவ்வுயிர்க்கும் அருளுடையராய்

வாழும் அறவோர் பெருமையினை நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் விரித்துரைக்கின்றார். அந்தணர் என்னுஞ் சொல், அழகிய தண்ணளியை உடையார் எனக் காரணப் பெயராய், எவ்வுயிர்க்கும் அருளுடைய பெரியோர்களாகிய துறவிகளேயே சிறப்பாகக் குறிப்பதாகும். இவ்வுண்மையினை,

"அந்தணர் என்போர் அறவோர் —மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழு கலான்."
—(திருக்குறள் 30)

எனவரும் குறளில் திருவள்ளுவர் தெளிவாகக் குறித்துள்ளார். இத்திருக்குறளை அடியொற்றி அமைந்தது,

"அந்தண்மை பூண்ட அருமறையந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர்"
(திருமந்திரம் 234)

எனவரும் திருமந்திரமாகும். அந்தணர் என்பதற்கு அழகிய தண்ணளியினையுடையார் எனத் திருவள்ளுவர் குறித்த காரணத்துடன், வேதத்தின் அந்தத்தை அணவுவோர் என மற்றொரு காரணத்தினையும் இயைத்துக் கூறும் நிலையில் அந்தண்மை பூண்ட அந்தணர், அருமறையந்தத்துச் சிந்தைசெய் அந்தணர் எனத் திருமூல நாயனார் கூறிய விளக்கம் இங்கு உணரத்தக்கதாகும்.

தம் குடியிற் பிறந்திறந்த முன்னோராகிய தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், இல்லிருந்து அறஞ் செய்தற்குரிய தான் என்னும் ஐந்திடத்துஞ் செய்ய வேண்டிய அறங்களை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய கடமையாகும். இக்கடமையினை அறிவுறுத்துவது,

"தென்புலத்தார், தெய்வம், விருந்து,
ஒக்கல், தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (43)

எனவரும் திருக்குறளாகும். தென்புலத்தார் முதலிய ஐவகையும் அறஞ்செய்தற்கு இடனாதலின் அவற்றை 'ஐம்புலம்' எனக் குறித்தார் திருவள்ளுவர். எல்லா அறங்களும் தான் உளனாய் நின்றுசெய்ய வேண்டுதலின் தன்னைப் பாதுகாத்தலும் இல்வாழ்வானுக்குரிய கடமையாயிற்று. இல்வாழ்வானால் ஈட்டப்பெறும் பொருட் பகுதிகளில், அவனாற் செய்யப்பெறும் ஐவகை யறங்களுக்கும் ஐந்துகூறு தேவைப்படுதலால், அவ்வைந்துக்கும் ஐந்து கூறுகளை யொதுக்கி, ஆறாங் கூறாக எஞ்சிய பொருளை அரசனுக்குரிய வரிப் பொருளாகத் தருதலைத் தமிழ் முன்னோர் அரசியல் நெறி முறையாக வகுத்துள்ளார்கள். பழந்தமிழர் வகுத்த அரசியல் நெறி முறையினைத் திருவள்ளுவர் இத்திருக்குறளில் உய்த்துணர வைத்துள்ளார். இந்நுட்பத்தினை, 'அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று; இவ்வைம்புலத்திற்கும்ஐந்துகூறு வேண்டுதலான் என்பதறிக' எனப் பரிமேலழகர் இனிது புலப்படுத்தியுள்ளார்.

உலகியலில் மக்கள் வாழ்க்கை செவ்விதின் நிகழ்தற்கு அரணாயமைந்தது அரசியல் நெறியாகும். எனவே அந்நெறிமுறையினைப் பேணிக் காக்கும் வகையில் குடிமக்கள் தாம் ஈட்டிய பொருளின் ஒரு பகுதியினை அரசனுக்கு இறைப்பொருளாகத் தருதலைக் கடமையாகக் கொண்டனர். மன்னுயிர்களைத் தன்னுயிர்போற் பேணிக் காக்கும் மன்னன், மக்கள் ஈட்டிய பொருளில் ஆறிலொரு பகுதியினையே தனக்குரிய வரிப் பொருளாகப் பெறுதற்குரியனாவன். திருவள்ளுவர் அறிவுறுத்திய அரசியல் நெறி முறையாகிய இவ்வுண்மையினை,

'சிறந்த நீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக்கு ஆறிலொன்றாமே'
(244)

எனத் திருமூல தேவர் தெளிவாக எடுத்துரைத்துள்ளமை உணரத்தகுவதாகும்.

மனமொழி மெய்களாகிய முக்கரணங்களும் தீ நெறிக்கண் செல்லாவண்ணம் ஐம்பொறிகளையும் அடக்கியாளுந் திறத்தினை அறிவுறுத்த எண்ணிய திருவள்ளுவர், ஆமை தன் ஐந்துறுப்புக்களையும் இடர்புகுதாமல் அடக்கிக் கொள்ளுதலை உவமையாக எடுத்துக்காட்டி விளக்குகின்றார்.

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து' (126)

எனவரும் திருக்குறளை அடியொற்றியமைந்தது,

'ஒருமையுள் ஆமைபோல் உள்ஐந்தடக்கி
இருமையுங் கேட்டிருந்தார் புரையற்றே''
(-133)

எனவரும் திருமந்திரத் தொடராகும்.

தாம் ஈட்டிய பொருளை இரவலர்க்கு ஈந்து மகிழாது பின் இழந்து வருந்தும் அருளில்லாதாரை நினைந்து இரங்கும் நிலையில் அமைந்தது,

'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்' (228)

எனவரும் திருக்குறளாகும். தம்பா லுள்ள பொருளை வறுமையால் வருந்தும் எளியோர்களுக்கு ஈந்து அவர்களது இன்முகம்கண்டு இன்புறும் வாய்ப்பினை அடையப் பெருத வன்கண்மையுடையோர், உயிர்ப்பண்பாகிய அன்பில்லாதவர்களாய் அறத்தின் தன்மையினையுணராத அறிவிலிகளாவர் என்பார்,

'இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையினலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே'
(திருமந்திரம்-267)

என்ருர் திருமூல தேவர்.

தவநிலையில் உறுதியான ஊற்றமுடையவர்களுக்கே தவவேடம் ஏற்புடையதாகும் எனவும், தவஞ் செய்யும் உள்ளமில்லாதவர்கள் தமக்கு ஒவ்வாத தவவேடத்தினை மேற்கொள்வது பயனற்ற செயலாய் உலகத்தாரால் இகழப்படும் எனவும் அறிவுறுத்துவது'

'தவமுந்தவமுடை யார்க்காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள்வது' (-292)

எனவரும் திருக்குறள். இத்திருக்குறட் பொருளை விரித்துரைக்கும் முறையில்,

தவமிக்கவரே தலையான வேடர்
அவமிக்கவரே அதிகொலை வேடர்
அவமிக்கவர் வேடத்தாகார் அவ்வேடந்
தவமிக்கவர்க் கன்றித் தாங்க வொண்
ணதே' (-1661)

எனவும்,

'வேட நெறி நில்லார் வேடம்பூண்டென்பயன்
வேடநெறி நிற்பார் வேடம்மெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல் வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே' (240)

எனவும் திருமூல நாயனர் அருளிய மெய்ம்மொழிகள் உலக வாழ்வுக்கு அரணுகிய அரசியலுக்கும் அருளியலாகிய தவ வாழ்வுக்கும் இடையே அமைய வேண்டிய தொடர்பினை இனிது புலப்படுத்துதல் காணலாம்.

ஒரு பிறப்பிற் கற்றகல்வி ஒருவர்க்கு ஏழு பிறப்பிலும் சென்று உதவும் என்பதனை,

''ஒருமைக்கண் தான்கற்றகல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து'' (398)

எனவரும் குறளில் திருவள்ளுவர் வலியுறுத்துகின்ருர். இத்திருக்குறளை நினைவுகூறும் நிலையில் அமைந்தது,

'துணையது வாய்வரும் தூய நற்கல்வியே'
(294)

எனவரும் திருமந்திரத் தொடராகும். மனனுணர்வின் மாண்புடைய மக்கட் குலத்தார் இன்புறுதற்குக் காரணமாயமைந்த கல்வியின்சிறப்பினையும் அதனையுணர்ந்தோர், அக்கல்வியினை மேன்மேலும் விரும்பிப் பயில்வர் என்பதனையும்,

'தாமின் புறுவதுல கின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்' (399)

எனவரும் குறளில் ஆசிரியர் விரித்துரைத்துள்ளார். இத்திருக்குறட் பொருளைத் தொகுத்துக் கூறும் நிலையில் அமைந்தது,

'கற்றவர் பேரின்பம் உற்று நின்ருரே' (298)

எனவரும் திருமூலர் வாய்மொழியாகும்.

தன்கண் வந்த விருந்தினரை உபசரித்துப் பின்னும் வருதற்குரிய விருந்தினரை எதிர்பார்த்து அவர்களுடன் இருந்து உண்ணுதற்குக் காத்திருக்கும் நல்லியல்புடையவன் மறுபிறப்பில் தேவனய் வானவரால் எதிர்கொண்டு உபசரிக்கப்பெறும் தகுதியுடையனுவன் என்பதனை,

''செல்விருந்தோம்பி வருவிருந்து
—பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு'' (86)

என விருந்தோம்பல் அதிகாரத்திலும், எக்காலத்திலும் தன்பாலுள்ள உணவினைப் பலர்க்கும் பகுத்தளித்து உண்ணும் பழக்கமுடையவனைப் பசியென்னும் தீப்பிணி தீண்டுதலில்லை என்பதனை,

"பாத்தூண் மரீஇயவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது" (227)

என ஈகை என்ற அதிகாரத்திலும், காக்கைகள் தமக்கு இரையாயின கண்டவழி அவ்விரையை மறையாது தம்இனத்தை யழைத்து அதனுடன்கூட வுண்ணுதல் போலத் தன் சுற்றத்தாரை யெல்லாம் தன்னின் நீங்காமல் அன்பினுல்ஆதரித்து வாழும் இயல்புடையார்க்கே ஆக்கங்கள் மேன்மேல் உளவாகும் என்பதனை,

'காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே யுள' (-527)

எனச் சுற்றந்தழால் அதிகாரத்தும் உலகத்தார் பலர்க்கும் பயன்பட வாழும் அன்பின் திறத்தை ஆசிரியர் வகுத்துக் கூறியுள்ளார். மக்கள் வாழ்வு வளம் பெறு முறையில் மேற்கூறிய நல்லியல்புகளையெல்லாந் தொகுத்துக் கூறுவதாக அமைந்தது,

'ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந்துண்மின் பழம்பொருள்
போற்றன்மின்
வேட்கையுடையீர் விரைந்தொல்லை
யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம்
அறிமினே' (250)

எனவரும் திருமந்திரமாகும்.

இவ்வாறு திருமூலநாயனுர் அருளிய திருமந்திரத்தில் திருக்குறளின் சொற்பொருள் நலங்களை எடுத்தாண்டுள்ள பகுதிகள் நிரம்ப உள்ளன. திருக்குறளையும் திருமந்திரப் பனுவலையும் ஒப்பு நோக்கிப் பயிலுங்கால், 'தேவர் குறளும் திருமூலர் சொல்லும் ஒருவாசகம்' என்னும் உண்மை இனிது புலனுகும்.

குறள் அமுதம்

[கவிஞர் திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், ஆசிரியர், 'எழுத்தாளன்', திருச்சி]

ஒரு கவிஞனுடைய அனுபவ நூல், எல்லா காலத்திற்கும், எல்லா வயதுடைய மக்களுக்கும் பொருந்துவதாக அமைந்துவிடும். தமிழ்ச் சொற்களின் நயமும், நுட்பமும் ஆய்வுக்கு விருந்தாக அமையும் தன்மையுள்ளது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது ஒரு கருத்தை நமக்கு அறிவிக்கும் ஒரு வாக்கியம், ஆழ்ந்து, ஆய்ந்து நுணுகி அணுகுவோருக்கு அதைவிட சிறந்த கருத்து ஒன்றையும் நமக்கு உணர்த்துவதாகவும் உயர்வு பெற்றுவிடுகிறது.

திருவள்ளுவர் இந்த சொல் நூல் சித்திர வேலைப்பாட்டில் தலைசிறந்த கவிஞராக விளங்குகிருர். நமது பள்ளிக்கூடங்களில் ஐந்தாவது வகுப்பு தொடங்கி, தமிழ் பட்டப் படிப்பு வரையிலுள்ள எல்லா வகுப்புக்களுக்கும் வள்ளுவர் வருகைதந்து தாம் கண்ட அனுபவங்களை அவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ப விளக்குகிருர். திருக்குறளை தெய்வமறை என்று அறிஞர்கள் போற்றுவதற்கு அடிப்படை மனிதனின் அறிவு வளர்ச்சிக்கேற்ப அதுவும் வளர்ந்து வரும் நூல் என்பது தான்.

சின்னஞ்சிறுவர்கள் திருக்குறள் பாடங்களை மனப்பாடம் செய்து தமது நெஞ்சக்குளத்தில் ஊறவைத்துவிட்டால் அவர்களின் அறிவு விசாலம் ஏற்பட, ஏற்பட நூல் நயம், சொல்நயம், கவிநயம், பொருள்நயம் இவை ஒவ்வொன்ருக சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்ப அதுவும் வளர்ந்து விளக்கம் தருகிறது.

ஒரு நூலை பல ஆண்டுகளாக நான் கற்று வருகிறேன் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிருேம், சில சமயம் ஆச்சர்மும் அடைகிருேம். இவருக்குப் படிப்பே ஏருதா? இத்தனை வருடங்கள் ஒரே நூலை படிப்பது என்ருல், படிப்பு ஏறவில்லை என்பது தானே பொருள்? என்று நம்மில் சிலர் நினைத்துவிடுவோம் அல்லவா?

மரத்தின் கோணலை கருப்பு நூல் தட்டி பலகைகளாலோ, சரங்களாகவோ, அறுத்து நேராக்குவது கண்டிருக்கிருேம். அதுபோல,மனிதமனம் வளர்ச்சியின்போது சுற்றுப்புறத்தாலும், சூழ்நிலையாலும், சந்தர்ப்ப பேதத்தாலும் வேறுபட்டு, மாறுபட்டு, கோணலாகி விடுகிறது. கோணலாகிவிட்ட மனதை செம்மையாக்க, நேர்வழி நடத்த கவிஞனகிய தச்சன் கருத்தாகிய நூல் தட்டி நேராக்குகிருன். மனித மனத்தின் வளர்ச்சிக்கொப்ப கருத்து நூலும் புதிய காட்சிகள் காட்டி, விளக்கங்கள் தந்து வளர்ச்சியுறுகின்றது. இதுவே கவிஞனின் தனிச் சிறப்பாக அமைகிறது.

உதாரணமாக இங்கு ஒரு குறளை எடுத்து ஆராய்வோம். ஆய்வுக்குப்புகு முன்னர் ஒன்று தெரிவித்துவிடுகிறேன். இந்த ஆய்வு முன்னேயோர் கருத்துக்கு மாறுபட்டது அல்ல. இதுதான் இதற்கு பொருள் என்று திட்டவட்டமாகவும் கூறவில்லை. என்ருலும் என் வளர்ச்சியில் எடுத்துக்கொள்ளப்போகும் குறள் வரிகளுக்கு இவ்வாறும் பொருள்கொள்ளலாம் என்பதைத்தான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதனைவிட சிறந்த கருத்தும் விளக்கமும்கூட உதயமாகலாம் என்பதை மனத்தில்கொண்டு ஒரு குறளை எடுத்து ஆய்வோம்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்''

இந்த குறள் என் சிந்தனைக்கு விருந்தாக அமைகிறது. உழவுத்தொழில் செய்து அதனல் கிடைத்த வருவாயைக் கொண்டு உண்டு, உரிமையோடு வாழ்கின்றவரே வாழ்கின்றவர் ஆகிருர்கள். மற்று இருப்போர் அனைவரும், உழவரைத்தொழுது, சார்ந்து அவர்பின் செல்கின்றவர்கள் ஆகிருர்கள் என்பது இக்குறளுக்குக் கண்ட கருத்துரையாக சிறுவர்களுக்கு நாம் சொல்லுகிருேம்.

சிறுவர் சிறுமியர் தெரிந்துகொள்ளும் அளவுக்கு இவ்வுரை போதும். ஆனல் அறிவு வளர்ச்சிபெற்றவர்களுக்கு இந்த விளக்கம் போதாது. ஏனென்ருல் நிலம் என்பது அனைவருக்கும் கிடைக்கக்

கூடியதாகவும், அதனை ஒவ்வொருவரும் பயிரிட்டு அனுபவிக்கக்கூடியதாகவும் அது இருக்கவில்லை.

உழவுத்தொழில்மனிதவர்க்கத்திற்கு உணவு படைக்கும் சிறந்த தொழில், அத்தொழிலினுக்கு ஒரு தனிச்சிறப்பு ஊட்டக் கருதியே வள்ளுவர் உழவுஎன்ற அதிகாரத்தில் பேசுகிருர் என்று சொல்லலாம். உழவுத்தொழில் சிறந்ததாக இருந்தாலும், நம் அறிவுக்குப் புலனுகின்ற காலமுதல் எவராவது உழவர்களை மதித்தார்களா? போற்றினுர்களா? பின்பற்றிப் போனுர்களா? என்று நினைத்துப் பார்த்தால் இல்லை என்ற பதில் வரும்.

உழவன் கணக்குப் பார்த்தால் ''உழக்குகூட மிஞ்சாது'' என்று கூறி உழவுத்தொழிலைவிட்டு ஓடிவந்தவர்களே இன்று நகரத்தில் ஆலை அதிபர்களாகவும், தொழில் பிரமுகர்களாகவும், வணிகப்பெருமக்களாக்வும்விளங்குகிருர்கள்.

தற்காலத்தில் தமிழர் திருநாள் என்று பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்ற, வாழ்த்து இதழ்களில் உழவன், உழத்தியர் படம்போட்டு விற்பனை செய்யும் வியாபாரிகள் தங்கள் திறமையால் மற்றவர்கள் அதனை வாங்கி நண்பர்களுக்கு அனுப்பி மகிழ வைக்கிருர்கள் என்பதோடு இது சரியாகிவிடுகிறது.

இந்தக் குறளுக்கு அனுபவ உரை காணுமுன்னர் உழவு என்ற பகுதியை வள்ளுவர் எந்த இடத்தில் வைத்திருக்கிருர் என்பதை சிறிது பார்த்தால் மேற்கொண்டு செல்வதற்கு வழி தெரியும். குடிமை, மானம், பெருமை, சான்ருன்மை, பண்புடைமை, நன்றியில் செல்வம், நாணுடமை, குடிசெயல்வகை இவைகளைக்கூறி உழவு காட்டி நல்குரவு, இரவு இரவச்சம், கயமை இவைகளைக் கூறிப் பொருட்பாலை முடிக்கிருர்.

உயர்குணச் சிறப்புகளை வைத்துப் போற்றும் இடத்தில் உன்னதமான ஒரு குணச்சிறப்பைத்தான் வள்ளுவர் வலியுறுத்தியிருக்கவேண்டும் என்று என் அறிவுக்குப்பட்டது. சாதாரணமாக எத்தனையோ, ஆதாரமான தொழில்கள் இருக்க உழவுத்தொழிலை மட்டும் குறிப்பதாகவுள்ள ஒரு அதிகாரத்தை வைத்திருக்க நியாயமில்லை என்று அனுபவம் கூறுகிறது.

உழவு என்பது சிறுவர்களுக்கு உணவு பயிரிடும் உழவராகவும், அறிஞர்களுக்கு ஞானம் பயிரிடும் உழவராகவும் எடுத்துக்கொண்டு பார்த்தால்,வில்லேர் உழவர்களுக்கும், சொல்லேர் உழவர்களுக்கும் பொருந்துவதாக குறட்பா அமைந்திருக்கும் தனிச்சிறப்பு தெரிய வரும்.

உழவுத் தொழிலுக்கு ஆதாரமாக இருப்பது ஏர்முனை. ஏர்முனைக்குச் சிறப்புத்தருவது ''கொழு''என்னும் இரும்புக் கருவி. உழுது உழுது பண்பட்ட அந்த 'கொழு' முனை ஒளி பொருந்தியதாக அமைந்திருக்கும். கொழு முனையைப் போல் நம்மிடம் இருக்கும் ஒளியைக் கொண்டு உள்ளமாகிய வயலில் உழுது அங்கு சிவஞானமாகிய பயிர் ஏற்றி, சிவானுபவத்தை அறுவடை செய்யும் பண்புடையோரே, உலகத்தில் என்றும் வாழும் சிறப்புப்பெற்றவர்கள் ஆகிருர்கள். பிறவிப்பயனைப்பெற்றவர்கள் ஆகிருர்கள். மனிதப் பிறப்பின் இலட்சியத்தை அடைந்தவர்கள் ஆகிருர்கள். அந்த அருள்ஞானச்செல்வர்களின் அனுபவ ஞானம், மனித உடலுக்கு மட்டுமல்ல, மனித உள்ளத்திற்கும் உணவாக அமைகிறது.

அருள்ஞானம் படைத்தவர்களின் அடிச்சுவட்டைத் தொழுது அவர்களின் வழியை பின்பற்றுகிருர்கள் ஏனையோர். சென்று அனுபூதி அடையலாம் என்று இக்குறள் வலியுறுத்துகிறது என்பதாகவும்கொள்ள இடமிருக்கிறது.

இவ்வாறு மற்ற குறட்பாக்களுக்கும் உரை காணலாம். மனித அறிவுக்கும், அனுபவத்தின் தன்மைக்கும் ஏற்ற குறள். விரிந்துகொடுக்கும் ஆற்றல் படைத்தது. மன விரிவுக்குத் தக்கபடி விளக்கம் காட்டி விரியும் தன்மைபடைத்தது திருக்குறள் என்பதாலே அதற்குத் தனிச்சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. வள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு சிறப்பு விழாவைக் கொண்டாடும் இந்நேரத்தில்

வையகத்து மக்களுக்கு திருக்குறள் முப்பால் கொடுத்து உடலையும், மனதையும் வளர்ப்பது நமது கடமையாகிறது. அனைவரையும் அழைப்போம்.

வள்ளுவனார் முப்பாலை ஊட்டுகின்றார்
வையகத்து மாந்தர்களே பருக வாரீர்
கொள்ளைபசி தாகமெலாம் தீர்ந்துபோகும்
குறைவில்லை, நிறைவுண்டு, வாரீர் வாரீர்
வெள்ளமென குறளமுதம் மாந்த வாரீர்
மெலிவேனோ சோர்வேனோ ஓடிவாரீர்
உள்ளமெனும் ஓர் பெரிய நாட்டையாளும்
உலகோரே குறளமுதம் உமக்கே வாரீர்.

உள்ளத்து நோய் பலவும் தீரும் தீரும்
உயிர் அடரில் மெய்ஞ்ஞானம் ஏறும் ஏறும்
கள்ளமெலாம் அடங்கிவிடும், கடிய கோபம்
காதவழி நில்லாது ஓடும், ஓடும்
வள்ளலெங்கள் வள்ளுவனார் முப்பலுண்டால்
வையகமே மனத்திரையில் வந்து தோன்றும்
அள்ள அள்ளக் குறையாத குறளமுதமுண்ண
அனைவருமே சுற்றமதை அழைத்து வாரீர்.

காக்கை

[புலவர். க. சி. வள்ளிநாயகன், ஆலங்குடி]

'காக்கையின் நிறம் கருப்பு' என்ற தொடர், மாணுக்கர் தம் துவக்க வகுப்புக் கல்வியிற் பயின்றறிந்த பாடமாகும். சிறுவயதில் மாணுக்கர்க்குப் பலவகை நிறங்களை உணர்த்தியறிவுறுத்துவதற்காக இத்தொடர் துவக்க வகுப்புக் கல்வி பயிலும் இளைஞர்க்கான பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனைப் படிக்கும் அம்மாணவச் சிறுர் கறுப்பு நிறம் எவ்வகையில் தோற்றமளிக்கும் என உணர்த்துவிக்கப்பட்டு உணர்கின்றனர்.

''காக்கை 'கா,கா...' எனக் கரையும்'' என வரும் மற்றெரு தொடரின்மூலம், அம்பறவையின் ஒலி எவ்வாறு அமைந்திருக்கும் என்பதையும் அவர்கள் அறிந்துவிடுகின்றனர். இவ்வாறு நிற வேறுபாடுகளையும், குரல் வேறுபாடுகளையும் சிறுவர்க்கு முதல் வகுப்பிலேயே உணர்த்துவான்வேண்டி காக்கைக்கும் ஓரிடம் தரப்பட்டிருக்கிறது. இதற்குமேல் அச்சிறுர்க்கு அவ்வகுப்பில், அப்பறவையின் குணநலன்களையும் இத்தகையன எனப் போதித்தல் மிகவும் கடினமே.

ஆயினும், அச்சிறுர் எதனையும் நன்கு ஆராய்ந்துணரும் ஆற்றல் கைவரப்பெற்ற பெரியோராக ஆகும் பருவத்தில், அக்காக்கையின் தன்மைகளை அவசியம் உணர்தல் வேண்டும் எனக் கருதிய புலவர்கள் காக்கையைப் பற்றிப் பலவாறு பாடிச் சென்றுள்ளனர். அதனை இயன்றவரையில் சுருக்கியுணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

20-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்து புகழடைந்த தலைசிறந்த கவிஞர்களில் பாரதி, காக்கையை அறிமுகப்படுத்தும் முறை சிறியோர் முதல் பெரியோர் வரை அறிந்துணர வேண்டிய ஒன்றும். பாரதி, தன் கவிதைகளில் பல இடங்களில் காக்கையைப்பற்றிப் பாடிச் சென்றிருந்தாலுங்கூட அவற்றில் இரண்டு இடங்களை மட்டும் இங்குக் காண்போம்.

'' இன்ன நிறத்தன்; இன்ன உருவத்தன்; என எவராலும் கண்டறிய முடியாத கடவுளின் நிறம் கறுப்பு நிறமாகவே இருத்தல் கூடும் என்பதைத் துணிந்து உரைக்கும் பாரதியின் திறம் மிகவும் போற்றத் தக்கதொன்றும். 'தமிழர் பெரும்பாலும் கருநிறம் வாய்ந்தோராதலால், அவர் வணங்கும் கடவுளோரும் கருநிறம் வாய்ந்தவராக இருத்தலே தகுதியும், முறையும் ஆகும்? எனக் கருதியோ, என்னவோ பாரதி கடவுளைக் கருநிறமுடையவன் எனப் பாடிச் சென்றுள்ளார். அக்கடவுளின் கருநிறத்திற்கு வேறு பல புலவர்கள் வெவ்வேறு உவமை கூறிச் சென்றிருக்க, அவற்றில் ஒன்றை வழங்க ஒப்பாத பாரதியின் கண்முன் காக்கையே தோன்றியிருக்கிறது. எனவேதான் பாரதி,

> ''காக்கைச் சிறகினிலே நந்தலாலா
> —உன்றன்
> கரிய நிறம் தோன்றுதையா நந்தலாலா!''

எனப் பாடியிருத்தல் வேண்டும்.

இவ்வாறு கடவுளின் கருநிறத்துக்குக் காக்கையை ஒப்பிட்டுக் காட்டிய பாரதி ''அப்பறவையும் நமது சாதியைச் சேர்ந்ததேயாகும்'' என்று கூறி, மனிதரிடையே நடமாடும் சாதிநெறியாம் சழக்குநெறியையும் சாடிச் செல்கிருர். இல்லையேல்,

> ''காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
> கடலும் மலையும் எங்கள் கூட்டம்''

எனப் பாடியிருக்கமாட்டாரல்லவா!

20-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பாரதியால் உயர்ந்த நோக்கம் கொண்டு பாராட்டப்பட்ட காக்கை, பாரதிக்கு முன்னர் வாழ்ந்திருந்த சில புலவர்களால் பாராட்டப்படாமல், இழிவுபடுத்திக் கூறப்பட்டிருக்கிறது. அது, காக்கையின் 'தலைவிதி' போலும்! சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்டு வாழ்ந்த ஒரு புலவர், "காக்கை பிணத்தை விரும்பிச் சேரும். அதுபோல, மூர்க்கர் மூர்க்கரையே விரும்பிச் சேர்வர்" என்ற கருத்தமைய,

"மூர்க்கரை மூர்க்கர் உகப்பர்முது-காட்டில்
காக்கை உகக்கும் பிணம்"

எனப் பாடி வைத்திருக்கின்றுர்.

பாரதியால் போற்றிப் புகழப்பட்ட காக்கை அப்பாரதிக்கு முன் வாழ்ந்திருந்த புலவர் சிலரால் இழிவாகப் பாடப்பட்டிருத்தல் ஏன்? என ஆராய்தல் நமக்கு முக்கியமாகிறது. எதனையெடுத்தாலும், திருக்குறளில் அதுபற்றி என்ன கூறப்பட்டுள்ளது என அறிய விரும்பும் மறுமலர்ச்சிக் காலமாக இக்காலம் விளங்குவதால், வள்ளுவரது குறளைத் தேடி நாமும் செல்ல வேண்டியிருக்கிறது.

'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்ளுதலே' வள்ளுவன் கண்ட ஆய்வு முறையாகும் என நாம் அறிவோம், வள்ளுவரை எச்சமயத்தவரும், எக்காலத்தவரும், எக்கருத்து உடையவரும் போற்றிப் பாராட்டுவதால், யாராலும் பாராட்டப்படும் அவர் காக்கையைப் பற்றி என்ன கூறியிருக்கிறுர் என அறியவேண்டியது அவசியமாகும். 'மிகைநாடி மிக்க கொள்ளும்' மேம்பட்ட உள்ளத்தையுடையவரல்லவா வள்ளுவர்! ஆகவே, நாமும் வள்ளுவரிடம் வருவோம்.

வள்ளுவரின் அருகில் வந்ததும், அவர் காக்கையைப் பற்றிய பாடல்களில் ஒன்றினை நாம் அறிய முடிகிறது. அப்பாடலை நாம் பார்த்ததும், வள்ளுவர் குணம்நாடிக் குற்றமும்நாடி அவற்றுள் காக்கையிடம் மிகுதியாக அமைந்திருப்பது எது என அறிந்துணர்ந்து கூறிய திறத்தைக் காணவும் முடிகிறது. காக்கையைக் கண்டதும், அவர் அதன் குண குற்றங்களை ஆராய்ந்தவிடத்து அப்பறவை அவரது உள்ளத்தைக் கவர்ந்துவிட்டதுபோலும்!

வள்ளுவர், தாம்கண்ட எல்லா உயிரினங்களும் தமக்கு உணவு கிடைத்ததும், தாமே விரைவில் உண்டு முடித்திடுகின்ற தந்நலம் கொண்டு விளங்குவதைக் கண்டார். ஆனுல், காக்கை உணவினைக் கண்டதும் தன் இனத்தைக் கரைந்து அழைத்து அவற்றேடு சேர்ந்து பகுத்துண்டலாகிய பண்பை-நூலார் தொகுத்துணர்த்துவனவற்றுள் எல்லாம் தலையான அறப்பண்பைப் பெருந்தன்மையைப் பெற்று விளங்கும் இயல்பினைக் கண்டார். ஆறறிவும் நிரம்பிய மக்களினத்தில்கூடப் பகுத்துண்ணும் பண்பு காணப்படாதபோது, ஆறறிவிற்குறைந்த காக்கையிடம் அச்சிறப்பு இருந்ததைக் கண்டதும், வள்ளுவர், அதனிடம் அமைந்துள்ள வேறுபல சிறு குற்றங்களையெல்லாம் மறந்து, அதன் குணத்தைப் போற்றியுரைப்பதே அறிவுடைமை; அறமுடைமை எனக் கருதியிருக்கிறுர்.

எங்கள் வெளியீடுகள்

அமரர் அறிஞர் அண்ணு அவர்களின் அரிய நூல்கள் :

ஆரியமாயை	1—50	சிறு கதைகள்	1—00
கலிங்கராணி	3—50	ஆறு கதைகள்	1—00
ரோமாபுரி ராணிகள்	2—00	குமரிக்கோட்டம்	1—00
கம்பரசம்	1—50	உலகப்பெரியார் காந்தி	1—00
பணத்தோட்டம்	1—50	கபோதிபுரக்காதல்	1—00
ஜமீன் இனும் ஒழிப்பு	1—50	நாம்	1—00
கற்பனைச் சித்திரம்	1—00	நிலையும்—நினைப்பும்	1—00
		தீ பரவட்டும்	1—00

* * *

முதல் அமைச்சர்

கலைஞர் கருணாநிதி அவர்களின் அரிய நூல்கள் :

வெள்ளிக்கிழமை	2—50	நாடும் நாடகமும்	1—00
பழக்கூடை	1—00	நளாயினி	1—00
		கண்ணடக்கம்	1—00

* * *

நிதி அமைச்சர் K. A. மதியழகன் அவர்களின் அரிய நூல்கள்:

நன்றி யாருக்கு	1—00	அறிவின் தூதர்கள்	1—00
		டாக்டரம்மா	1—00

* * *

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் அரிய நூல்கள் :

கலித்தொகை தரும் காதற் காட்சிகள்	2—50
மதமும் மூட நம்பிக்கையும்	2—00

திராவிடப் பண்ணை

34, சிந்தாமணி கடைவீதி — திருச்சி-2.

உள்ளுவந்தோதும் உலகு!

1. வையம் புகழ்ஞானி வள்ளுவன் மக்களெலாம்
உய்யும் படிமுப்பால் ஓதினன் — ஐயமின்றி
இம்மை மறுமை இரண்டுக்கும் நல்வழியைச்
செம்மையிற் கண்டு தெளிந்து.

2. ஜாதி மதபேதம் சற்றேனு மின்றிநடு
நீதி நிலைகண்ட நீள்புகழோன் – கோதிலாச்
செந்தமிழ்ச் செல்வன் திருவள்ளுவன் பாதம்
சிந்தையிற் கொள்வோம் தினம்.

3. புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன் — வித்தகன்
தெய்வப் புலவன் திருவள்ளுவன் சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது.

4. நாலாரணப் பசுவை நாடிக் கறந்தளித்த
பாலாகு மென்று பாராட்டுமே – நூலாய்ந்து
வள்ளுவன் தந்த மறுவில் திருக்குறளை
உள்ளுவந் தோதும் உலகு.

—கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை.